# வடக்கு-கிழக்கு மாகாண சபை ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய சட்ட மன்றமாக மாற்றம்!

22 3-1990

விலை ரூபா 3-00

ஈழநாடு
THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 18 ஷஃபான் பிறை: 4 இதழ்: 17
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 02-03-1990

(லண்டன்)
வடக்குக் கிழக்கு மாகாண அரசு தனது பெயரை ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய சட்டமன்றம் என மாற்றியுள்ளது.
முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் இந்த மன்றத்தின் புதிய தலைவராகத் தன்னை அறிவித்துக்கொண்டிருக்கிறார்.
(8ம் பக்கம் பார்க்க)

## கப்பலில் சென்றவர்களுக்கு அரசியல் தஞ்சம் அளிக்க இத்தாலி, கிறீஸ் மறுப்பு!

(ரோம்)
இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் கப்பலில் சென்ற பொழுது இத்தாலியும கிறீசும் அவர்களை ஏற்கமறுத்தது.
இந்த இருநாடுகளும் இவர்களை ஏறக மறுத்தமையால் கப்பலிலேயே இவர்கள் தொடர்ச்சியாக தங்க வேண்டியேற்பட்டது.
இத்தாலியில் அரசியல் புகலிடம் கோரிய இவர்கள் வேலை பார்க்க அனுமதியும் விசாவும் தருவதாக உறுதி கூறிய ஏஜென்ஸிகள இவர்களை இடைவெளியில் விட்டுமறைந்துள்ளன.

# நட்புறவு ஒப்பந்தம் இழுபறி!

# இந்தியா வலியுறுத்துகிறது!

## அமைதிப்படை வெளியேறமுன் கைச்சாத்தாகவேண்டுமாம்

நமது அரசியல் விமர்சகர்

இலங்கை-இந்தியா நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதில் பெரும் 'இழுபறி' ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

[...]கல் ஒப்பந்தம் இரு நாடுகளின் தலைநகர்களையும் 'எட்டி'ப் பார்த்த போதிலும் சில முக்கியமான விஷயங்களில் இப்பொழுது தடங்கல்கள் ஏற்பட்டிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

[...]ட்புறவு ஒப்பந்தத்தில் இலங்கை, சுதந்திரமாக மட்டுமே கைச்சாத்திடும் என்றும், அச்சுறுத்தல், கட்டாயம் என்பதில் அர்த்தமே இல்லை என்றும் இந்தியாவுக்கு இலங்கை தெளிவுபடத் தெரிவித்திருப்பதாக மேற்படி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

நேற்றுக்காலை நடைபெற்ற [...]மைச்சரவைக் கூட்டத்தைத் [...]டர்ந்து, அமைச்சரவையி[...] முடிவுகளை அறிவிப்பதற்காகப் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது மந்திரிசபைப் பேச்சாளரான திரு. ரஞ்சன் விஜேரத்ன நிருபர்களின் கேள்விகளுக்கு விபரமாகப் பதிலளித்தார்.

### குஜ்ராலுடன் தொலைபேசி தொடர்பு

''இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் [...]னுடன் தொலைபேசியில் [...]டர்பு கொண்டார். இந்[...]
(8ம் பககம் பார்க்க)

## வி. பி. சிங் நமீபியா பயணம்

(புதுடில்லி)
நமீபியாவின் சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்[...]
(8-ம் பக்கம் பாக்ர்க)

## மட்டக்களப்பில் "இராணுவம் முகாமுக்குள் இருக்கிறது பொலிஸார் கடமையில்"

### ஹமீத் விஜயம் குறித்து ரஞ்சன்

(கொழும்பு)
''மட்டக்களப்பு வழமைத்குத் திரும்பியுள்ளது. அங்குள்ள இலங்கை இராணுவம் தத்தமது முகாமுக்குள்ளேயே இருக்கிறது. பொலிசார் தங்களது கடமைகளைச் சரிவரச் செய்கின்றனர்'' என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின
(8ம் பக்கம் பார்க்க)

## சகல பல்கலைக்கழகங்களும் இயங்குகின்றன

(கொழும்பு)
நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் தற்போது சீராக இயங்கி வருவதாக அறிவிக்கப்படுகிறது.
87 சதவீதத்துக்கு அதிகமான மாணவர்களும், 95 சதவீதத்துக்கு அதிகமான விரிவுரையாளர்களும் பல்கலைக்கழகங்ளுக்கு வருகைதருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## வெலிக்கடை சிறையில் வாடும் 37 தமிழ் இளைஞர்கள்!

### விடுவிக்க உதவுமாறு உருக்கமான கோரிக்கை

(கொழும்பு)
வெலிக்கடைச் சிறைச்சாலையில் 37 தமிழ் இளைஞர்கள் கடந்த நான்கு வருடமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அண்மையில் அங்கிருந்து விடுதலையானவர்கள் 'ஈழநாடு'க்கு கவலை தெரிவித்துள்ளனர்.
தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்று குற்றம்சாட்டப்பட்டே இந்த இளைஞர்கள் கடந்த நான்கு வருடங்களுக்கு முன் கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் இப்போது விடுதலை செய்யப்படாது தடுத்து வைக்கப்
(8 ம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் ஒப்படைத்தல் புலிகளின் நிலைப்பாட்டில் ஜனாதிபதிக்கு நம்பிக்கை

### ரஞ்சன் தகவல்

(கொழும்பு)
"இந்திய அமைதிப்படை இந்த நாட்டிலிருந்து முற்றாக வெளியேறியதும், தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களைக் களைந்து நிராயுதபாணிகளாக செயல்படுவார்கள்'' என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், வெளிவிவகார அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்துள்ளார்.
நேற்றுக் காலை நடை
(8-ம பச்கம் பார்க்க)

## பாண்டிச்சேரியில் தி.மு.க. தலைமையில் கூட்டணி அரசு

### கலைஞர் தகவல்

(சென்னை)
பாண்டிச்சேரியில் தி. மு க. தலைமையிலான கூட்டணி அரசு அமைவது உறுதி என தமிழக முதலமைச்சர் திரு. எம். கருணாநிதி நேற்று மாலை பத்திரிகையளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.
சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றுள்ள திரு. எஸ். கமலக்கண்ணன் தி. மு. க. தலைமையில் அமையவிருக்கும் அரசுக்கு ஆதரவு வழங்குவது என்றுக்கு உறுதியளித்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி மேலும் தெரிவித்தார்.
இத்தேர்தலில் தி. மு. க தலைமையிலான கூட்டணிக்கு 15 இடங்களும் இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கு 14 இடங்களும், ஒரு சுயேட்சை வேட்பாளரும் வென்றுள்ளனர்.
தி. மு. க. 9 இடங்களிலும் ஜனதாதள் 4 இடங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு
(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

எமது கடைக்கு பெண் காசாளர் தேவை. நேரில் வரவும். துர்க்கா டிரேடர்ஸ், 85, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-3547)

இரவு வேலைக்கு தொழில் நுடப வேலையில் பயிலுனராக சேர்வதற்கு அனுபவமுள்ள வர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. தொடர்பு: விளம்பர இலக் கம் 578, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-578)

கணக்காளர் ஒருவர் யாழ். நகரில் உள்ள ஒரு விற்பனை ஸ்தாபனத்திற்குத் தேவை. வருமானவரி, B. T. T. போன்ற வேலைகளில் அனு பவம் உள்ளவர்களுக்கு முன் னுரிமை வழங்கப்படும். இரு பாலரும் சொந்தக் கையெழுத் தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 571, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப் பாணம். (ஏ 571)

விற்பனை நிலையம் ஒன்றுக்கு வேலை செய்வதற்கு 20 வய திற்குட்பட்ட ஊழியர்கள் தேவை. வியாபாரம் சம்பந்த மான விடயங்கள் அனுபவ முள்ளவர்களால் கற்றுக் கொடுக்கப்படும். ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்க வும். விளம்பர இல. 572, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (ஏ 572)

பிரபல விற்பனை நிலையப் ஒன்றிற்கு காசாளர் (Cashier) தேவை. ஆங்கில அறிவுள்ள வர்களும், முன் அனுபவம் உள்ளவர்களும், யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கவும். முடிவு திகதி 05-03-90. பிணைப்பணம் கட்டவேண்டும். விளம்பர இல. 570, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (ஏ 570)

### நாவல்கள்

மீராவெளியீடு 'ராதையின் நெஞ்சம்' நாவலாசிரியர் கே. எஸ். ஆனந்தன எழுதிய குடும்ப நாவல் ''பூஜைக்காக வாழும் பூவை''- விற்பனையாகின்றது. ராஜன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். All Ceylon Distributors, Jaffna-Colombo. (சி 3544)

## வடமராட்சி வங்கிகளில்
# பணக் கொடுப்பனவு; அதிகாரிகள் நடவடிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதி வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பணங்களை வழங்குவதற்காக ஸ்ரீலங்கா பொலிசார் ஹெலிகாப்டர் மூலம் பணத்தை எடுத்து வந்து வங்கிகளுக்கு வழங்கவுள்ளனர். அத்துடன் வங்கிகளுக்கு வேண்டிய பாதுகாப்புக்களையும் ஆயுதம் தாங்கிய ஸ்ரீலங்கா பொலிசார் வழங்கி வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதி மக்கள் வங்கிகளில் பணத்தைப் பெற முடியாமல் பலத்த கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். வாடிக்கையாளர்களின் இக் கஷ்டங்களை நீக்குமுகமாக இப்பகுதிகளில் உள்ள வங்கிகள் இணைந்து சகலரினதும் ஒத்துழைப்புக்களுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்தேவாடிக்கையாளர்கள் வங்கிகளில் பணத்தைப் பெறக்கூடிய இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்திய இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்த வங்கிகளின இரும்புப்பெட்டிகள் தற்போது பருத்தித்துறை ஸ்ரீலங்கா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவஇரும்புப் பெட்டிகளிலேயே வங்கிகளின் பணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு நாள்தோறும் வங்கிகளுக்கு வங்கி அதிகாரிகளால் பாதுகாப்புடன் எடுத்துச்செல்லப்படவுள்ளன.

இந்திய இராணுவத்தினர் முன்னர் ஹெலிகாப்டர் மூலம் வங்கிகளுக்குப் பணத்தை எடுத்துவந்து கொடுத்தனராயினும் பின்னர் அதற்கு மறுப்புத்தெரிவித்ததையடுத்தே வடமராட்சிப் பகுதி வங்கிகளில் வாடிக்கையாளர்கள் பணத்தைப் பெறமுடியாமல் இருந்தது. இன்னும் ஒரு சிலநாட்களில் ஸ்ரீலங்கா பொலிசார் ஹெலிகாப்டர் மூலம் பணத்தைக் கொண்டு வருவார்களென வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார். பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிகளுக்கும், பருத்தித்துறை நெல்லியடி மக்கள் வங்கிகளுக்கும், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கும் பருத்தித்துறை ஸ்ரீலங்கா பொலிஸ் நிலையத்திலிருந்தே பணம் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

# 'பரம்பரையை கட்டிவளர்த்த பெருமைக்குரியவர்'

(சாவகச்சேரி)

ஓய்வுபெற்றுள்ள டிறிபேக் கல்லூரி துணை அதிபர் திரு. பாலரத்தினம் பாரம்பரியமாக அதிபர் ஆசிரியர் பரம்பரையைக்கட்டி வளர்த்த பெருமைக்குரியவர் இவரின் தந்தையார் ஆசிரிய பணியில் அதிபராகவே இருந்தார். மாணவனாக ஆசிரியராக துணை அதிபராகவிருந்து இக்கல்லூரி வளர்ச்சிக்கு உதவிய இவரை இக்கல்லூரி என்றும் மறக்க முடியாது''.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள துணை அதிபர் திரு ஏ. எஸ். பாலரத்தினத்துக்கு கல்லூரி அபிவிருத்தி சபை அளித்த சேவைநலம்பாராட்டு வைபவத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. யு. சுந்தரம்பிள்ளை பேசுகையில் இவ்வாறு கூறினர்.

கல்லூரி அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. எஸ் கணபதிப்பிள்ளை தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

திரு. சுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் ''நான் இவரிடம் 1954-ம் ஆண்டு பயின்றேன். இவர் பழக மிகவும் இனியவர். கற்பிக்கும் ஆற்றல் மிகுந்தவர் அந்நாளில இவரிடம் பெற்ற அன்பு, கீழ்ப்படிவு முதலான பண்புகள் இன்றுவரை நிலைத்துள்ளது'' என்றார்.

சாவகச்சேரி நீதவான் திரு. மு. திருநாவுக்கரசு, சட்டத்தரணி திரு. ஐ. ஞானதாஸ் அபிவிருத்திச்சபை செயலாளர் சிரேஷ்சட்டததரணி திரு. சு. கந்தசாமி, துணைஅதிபர் திரு. நாகேந்திரராசா ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர்.

## தென்னை அபிவிருந்திச்சபை நடவடிக்கை

(மானிப்பாய்)

அச்சுவேலியில் தென்னை நாற்று உற்பத்தி மேடை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

8 ஏக்கர் காணியில் தென்னை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் நிறுவப்பட்டு வருகின்றது. இதனால் யாழ் மாவட்ட மக்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனர். (71)

## அபிவிருத்திசபை பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அபிவிருத்திச் சபைச் செயற்குழுக்கூட்டத்தில் இப்பாடசாலை இவ்வருடம் சைவபரிபாலானசபையினரால் நடாத்தப்பட்ட 1989-ம் ஆண்டு சைவசமயப் பரீட்சையில் சித்திபெற்று ஓர் மாணவி தங்கப்பதககம் பெற்றமைககாகவும், அதே ஆண்டுக்குரிய 5-ம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் மிகநீண்ட இடைவெளியின் பின்னர் இருமாணவர்கள் தெரிவு செய்யப்பட்டமைக்காகவும் அதிபரையும் ஆசிரியர்களையும் அபிவிருத்திச் சபை ஏகமனதாகப் பாராட்டியது.

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:

28 - 02 - 1959

மறைவு:

31 - 01 - 1990

### குணசிங்கம் செம்பகமாலினி

நீண்டநாட்கள் வாழ்ந்து எமக்கு நிழல் தருவாய் என்றிருந்தோம். நீ எம்மை நிற்கதியாக்கிவிட்டு விரைவிலே விண்ணுலகம் சென்றது ஏன் எம்பிறப்பே!

உன்பிரிவால் துயருறும்:

அம்மம்மா, அப்பா, அம்மா, (சகோதரர்கள்), உற்றுர், உறவினர்கள், ஆசைஅப்பா, ஆசையம்மா, ஆசைமாமி, சின்னையா, சின்னம்மா.

ஐ. தங்கம்
இல 27, 3ம் யூனிற், முரசுமோட்டை.
பரந்தன். (ஏ 3548)

# உங்கள் பிரச்னை என்ன?

**கேள்வி:** நான் ஒரு பலசரக்கு வியாபாரி, மொத்த விற்பனவுவரி எந்தத் தொகைக்கு மேல் எவ்வளவு வீதத்தில் கட்டவேண்டும்? (வியாபாரி கொக்குவில்)

**பதில்:** நீங்கள் பலசரக்கு வியாபாரியாக இருப்பதால் ரூ. 25,000ற்கு மேற்படின் மொத்த விற்பனையில் காலாண்டுக்கு ஒரு வீதப்படி செலுத்தவேண்டும்.

மற்றவர்களின் தகவலுக்காக:- நகைஉற்பத்தியாளராயின் 10% மும், ஒப்பந்தகாரராயின் 3 வீதமும், கொமிசன் பெறுவர்களாயின் 5% மும், வட்டிக்கு கொடுப்பவர்களாயின் பெறும்வட்டிக்கு 5% மும், டாக்டர், எஞ்சினியர் போன்ற உயர்தொழில் புரிபவர்களுக்கும், சேவை அளிப்பவர்களுக்கும் 4% மும் கட்டவேண்டும்.

இதனை அந்தந்தப் பிராந்திய இலங்கை வங்கியில் கட்டவேண்டும்.

# முறைசாரா கல்விப் பிரிவுக்கு மத்திய தொழில் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டமுறைசாரா கல்விப் பிரிவுக்கு மத்திய தொழில் பயிற்சி நிலையமொன்று கல்விப் பணிமனைக்கு முன்பாகவுள்ள காணியில் அமைக்கப்படவுள்ளது.

இக்காணியில், புதிய கட்டிடம் அமைவதற்கான பெயர்ப் பலகை நாட்டப்பட்டுள்ளது. இந்நிலையம் ஐம்பத்தைந்து லட்சரூபா செலவில் அமைக்கப்படும். இதன் முதல்கட்டமாக பத்துலட்ச ரூபா பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. (12)

## வெளிநாடுகளுக்கு
# யாழ். குடாவைவிட்டு 2 லட்சம் பேர் பயணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடா நாட்டிலிருந்து கடந்த பத்து வருடங்களில் சுமார் இரண்டு லட்சம் பேர் அகதிகளாகவோ, தொழில் வாய்ப்புப் பெற்றோ வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

பெரும்பாலானோர் தொழில் வாய்ப்பு பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மே. ஜேர்மன், கனடா, பிரான்ஸ், சுவிற்ஸர்லாந்து, பிரிட்டனுக்கும் சென்றுள்ளனர். கனடாவில் 'ரொறன்ரோ' நகரில் ஒரு பகுதி 'குட்டி யாழ்ப்பாணம்' என அழைக்கப்படுமளவிற்கு இவர்கள் அங்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண பொருளாதாரத்தில் பெரும் பகுதியை வெளிநாட்டுப் பணமே நிர்ணயிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# கிளிநொச்சியில் பதிவாளர் அலுவலகம்

(மானிப்பாய்)

யாழ். பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பிறப்பு, இறப்பு விண்ணப்பப் படிவங்கள் கையேற்பது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகம் மார்ச் மாதம் 14ந் திகதி திறக்கப்படவுள்ளதால் அம்மாவட்டத்தைச் சேர்ந்த பிறப்பு, இறப்பு, திருமணம் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் அடுத்த மாதம் இங்கிருந்து எடுத்துச் செல்லப்படுவதாலேயே அம்மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி, பளை, புலோப்பளை, கிளிநொச்சி, பரந்தன் போன்ற இடங்களிலுள்ள விண்ணப்பங்கள் கையேற்பது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (71)

## யாழ். மாவட்டத்திலும்
# சாய்ப்புச் சட்டம்
## விரைவில் அமுலாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலும் காலை 10 தொடக்கம் மாலை இரவு 10 மணிவரை கடைகள் திறக்கும் நடைமுறையை அமுல்படுத்தும்படி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத் தொழில் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வந்திருப்பதாக யாழ் தொழில் உதவி ஆணையாளர் திரு ஏ. சச்சிதானந்த சோதி தெரிவித்திள்ளார்.

இதன்பிரகாரம் ஹோட்டல்கள், பழக்கடை, பார்மசி, பத்திரிகை விற்கும் கடைகள் போன்ற சில ஸ்தாபனங்களுக்கு முக்கியமாக விதிவிலக்களிக்கப்பட்டிருக்கிறது.

நல்லூர் திருவிழாக் காலங்களில் இச்சட்டவிதி தளர்த்தப்பட்டு வழமைபோன்று கடைகள் காலை எட்டுமணிக்கு திறந்து வியாபாரம் செய்ய விசேசமாக அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றது.

நடைமுறைப் படுத்துவது பற்றி இரண்டொரு நாட்களில் தீர்மானம் எடுத்து வியாபார ஸ்தாபனங்களுக்கு தெரிவிக்கப்படலாம் என அந்த அதிகாரி தெரிவித்தார். (ம)

## தொழில்நுட்ப கல்லூரி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் நடப்பு (1990) வருடத்திற்கான புதிய வகுப்புகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (144)

# ★ இந்தியாவில் நடந்த மினி பொதுத்தேர்தல்: காங்கிரஸ் தோல்வியடைந்ததால் கட்சி பிளவுபடும் சாத்தியம்

## நேரு யுகம் முடிந்ததாக அவதானிகள் கருத்து

### பாண்டிச்சேரியில் தி. மு. க. கூட்டணி

[புதுடில்லி] இந்தியாவில் எட்டு மாநிலங்களில் சட்ட சபைக்கும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் இடம்பெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வியடைந்துள்ளது. இத்தோல்வி திரு. ராஜீவ் காந்தியின் எதிர்காலத்தை பெரிதும் பாதிக்குமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். நேருயுகம் முடிவடைந்துவிட்டதாக மேற்குநாட்டு அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வடமாநிலங்களில் எட்டு சட்டசபைக்கும் தெற்கே பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் தேர்தல் நடைபெற்றது. இதில் பாண்டிச்சேரி தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளிவந்துள்ளது. தி. மு. க. கூட்டணி இங்கு வெற்றி பெற்றுள்ளது.

எட்டு சபைகளிலும் எதிர்க்கட்சி கூட்டணியே முன்னணி வகிக்கிறது. மேற்படி ஒன்பது பிரதேசமும் இந்திரா காங்கிரஸின் பிடியிலேயே இதுவரை காலமும் இருந்தது. சில மாநிலங்களில் எதிர்க்கட்சி கூட்டணிகள் வெற்றி பெறுமென ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இவ்வாறு காங்கிரஸ் தோல்வியடையுமென யாரும் எதிர்பார்க்கவில்லை.

கடந்தவருட பிற்பகுதியில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்த காங்கிரஸ் இந்த சட்டசபை தேர்தலிலும் படுதோல்வியடைந்திருப்பது திரு. ராஜீவின் தலைமைப் பதவிக்கு நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன் இந்திரா காங்கிரஸ் பிளவுபடும் நிலையையும் தோற்றுவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சியில் திரு ராஜீவ் காந்தியின் தலைமையை எதிர்த்து வந்த பல தலைவர்கள் இந்த நிலையை காரணம் காட்டி கட்சியை பிளவுபடுத்தலாம் என கட்சித்தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார். கட்சி பிளவுபடுவதை தடுக்க வேண்டுமானுல் திரு. ராஜீவ் காந்தி தலைமை பதவியை விட்டுக் கொடுக்கவேண்டும் என்று மற்றொரு தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைகுறித்து மேற்கு நாட்டு அவதானிகள் கருத்து தெரிவிக்கையில், காங்கிரஸ் கட்சி காங்கிரஸ் (ஐ என்றும் காங்கிரஸ் (ஆர்) என்றும் பிளவுபடும்நிலை விரைவில் தோன்றும் என்றும் தெரிவித்துள்ளனர். (சி)

---

# தேர்தல் முடிவுகள்

(புதுடில்லி)

இச்செய்தி அச்சுக்குப போகும்வரை கிடைக்கப் பெற்ற தேர்தல் முடிவுகள் வருமாறு:

**பாண்டிச்சேரி:**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | 30 |
| தேர்தல நடைபெற்ற தொகுதிகள் | 30 |
| வெளியான முடிவுகள் | 30 |
| காங்கிரஸ் (ஐ) | 11 |
| அ இ. அ. தி. மு. க. | 3 |
| தி. மு. க | 9 |
| ஜனதா தள் | 5 |
| இந்திய கம்யூ. | 1 |
| சுயேட்சை | 1 |

தி. மு. க. கூட்டணியுடன் சுயேட்சையும் இங்கு இணைந்துள்ளதால் ஆட்சியை தி. மு. க. கூட்டணியே கைப்பற்றுகிறது.

**ராஜஸ்தான்:**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | 200 |
| தேர்தல் நடைபெற்ற தொகுதிகள் | 199 |
| வெளியான முடிவுகள் | 189 |
| காங்கிரஸ் (ஐ) | 47 |
| பாரதீய ஜனதா | 83 |
| ஜனதா தள் | 51 |
| ஏனையவை | 07 |

**குஜராத்:**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | 182 |
| தேர்தல் நடைபெற்ற தொகுதிகள் | 181 |
| வெளியான முடிவுகள் | 180 |
| காங்கிரஸ் (ஐ) | 33 |
| ஜனதா தள் | 76 |
| பாரதீய ஜனதா | 64 |
| ஏனையவை | 08 |

**அருணுசலப் பிரதேசம்:**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | 60 |
| தேர்தல் நடைபெற்ற தொகுதிகள் | 60 |
| வெளியான முடிவுகள் | 04 |
| காங்கிரஸ் (ஐ) | 04 |
| ஜனதா தள் | |
| பாரதீய ஜனதா | |

**மத்திய பிரதேசம்**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | 320 |
| தேர்தல் நடைபெற்ற தொகுதிகள் | 319 |
| வெளியான முடிவுகள் | 216 |
| காங்கிரஸ் (ஐ) | 42 |
| ஜனதா தள் | |
| பாரதீய ஜனதா | 148 |
| இந்திய கம்யூ. | 03 |
| பி. எஸ். பி. | 01 |
| ஏனையவை | 05 |

**இமாசல் பிரதேசம்**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | 68 |
| தேர்தல் நடைபெற்ற தொகுதிகள் | 65 |
| வெளியான முடிவுகள் | 31 |
| காங்கிரஸ் (ஐ) | 04 |
| ஜனதா தள் | 03 |
| பாரதீய ஜனதா | 23 |
| இந்திய கம்யூனிஸ் | 01 |

**ஒரிசா**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | 147 |
| தேர்தல் நடைபெற்ற தொகுதிகள் | 147 |
| வெளியான முடிவுகள் | 147 |
| காங்கிரஸ் (ஐ) | 10 |
| ஜனதா தள் | 123 |
| இந்திய கம்யூனிஸ் | 05 |
| பாரதீய ஜனதா | 04 |
| இந்திய கம்யூனிஸ் (எம்) | 01 |
| ஏனையவை | 04 |

**பீகார்**

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | |
| தேர்தல் நடைபெற்ற தொகுதிகள் | |
| வெளியான முடிவுகள் | 30 |
| காங்கிரஸ் (ஐ) | 06 |
| ஜனதா தள் | 06 |
| பாரதீய ஜனதா | 08 |
| இந்திய கம்யூனிஸ் (எம்) | 01 |
| ஜே. எம். எம். | 08 |
| இந்திய கம்யூனிஸ் | 01 |

மகாராஷ்ரா தொகுதி முடிவுகள் இச் செய்தி அச்சிற்கு போகும் வரை கிடைக்கவில்லை. (சி)

---

# யுனிற்ரா கெரில்லாக்களுக்கு அமெரிக்கா உதவுகிறது

## அங்கோலா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

அங்கோலாவின் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்துவரும் 'யுனிற்ரா' கெரில்லாக்களுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவி செய்து வருவதாக அங்கோலா கடுமையாக குற்றம சாட்டியுள்ளது.

அமெரிக்காவிற்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு வந்துள்ள அங்கோலா வெளிவிவகார அமைச்சக தூதுக்குழுவே அமெரிக்க வெளிவிவகார அமைச்சிடம் மேற்படி தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன் அமெரிக்கா நான்கு விமானங்களில் போர்த் தளபாடங்களை 'யுனிற்ரா' கெரில்லாக்களுக்கு வழங்கியதற்கான முழு ஆதாரமும் தம்மிடமுள்ளதாகவும் அங்கோலா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தொடர்ந்தும் அங்கோலாவின் உள்விவகாரங்களில் சடுபட்டுவருவதாகவும் இது நிறுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளது. எனினும் அங்கோலாவுன் இந்தக் குற்றச்சாட்டுகளை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

இதேவேளை 'யுனிற்ரா' கெரில்லாக்களின் கட்டுப்பாட்டிலிருந்துவரும் இரு முக்கிய விமான தளங்கள் மீது கடந்த சில தினங்களுக்குமுன் அங்கோலா விமானத் தாக்குதல் நடாத்தியதும் தெரிந்ததே.

---

# முல்லைத்தீவு கிராமங்களில் கலை, கலாசார விழா

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் தோறும் கலை, கலாசார விழாவை தொடர்ந்து நடாத்துவதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துவருவதாக முல்லைத்தீவு பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. மஞே தெரிவித்துள்ளார். (144)

---

## நியமன தி.ம தாமதம்

(மன்னூர்)

மன்னூரில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும், இரண்டாவது தடவையாக மேன்முறையீடு நேர்முகப் பரீட்சையிலும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் நியமனம் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி அமுலுக்குவரும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் மத்திய அரசாங்கத்துக்கும், மாகாண அரசாங்கத்துக்கும் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல் காரணமாக நியமனம் செய்வது தாமதமாக்கப்பட்டுள்ளது.

## அதிகாரிகள் நியமனம்

(மன்னூர்)

மன்னூர் மாவட்டத்தில் புதிய சமூக சேவை அதிகாரிகளாக செல்வி ஜே. எம். ஜி. நிக்கிலாஸ் மன்னூா உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும், திரு ஏ. ஜெபதாஸ் அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும், செல்வி அமலி மரியாம்பிள்ளை நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் சமூக சேவைகள் அமைச்சினுல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

---

கிரிக்கெட்

# இந்தியா தோல்வி

(வெலிங்டன்)

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து 108 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மாட்டின் குறே திறமையாக ஆடி 168 ஓட்டங்களைப் பெற்றுர்.

அடுத்தாடிய இந்திய அணி 33 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 138 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக மாட்டின் குறே தெரிவு செய்யப்பட்டார். (சி)

---

சிரமதான முறையில்

# மயானம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணை கோம்பையன் மணல் மயானத்தில் கடந்த இரு வாரங்களாக சிரமதான முறையில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இச் சிரமதான வேலைகளை மாவிப்பய் வீதி, அராலி வீதி, பழம் வீதி ஆகிய இடங்களில குடியிருககும் ஜனசக்தி உதவியைப்பெறும் மக்களே மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேற்படி மக்களின் சேவையைப் பாராட்டி, மயாண பரிபாலன சபையும், யாழ் உதவி அரசாங்க அதிபரும் நன்றி தெரிவித்தனர். (வி)

---

# இராசி பலன்

2- 3- 1990

வெள்ளிக்கிழமை

மேஷம்:- மன நிறைவு, அதிஷ்ட வாய்ப்பு, சகோதரர் உதவி, குடும்பமகிழ்ச்சி, தொழில்பாதிப்பு.

இடபம்:- சுடுமையான போக்கு, தொழில் பாதிப்பு, அநாவசிய செலவு அகால போஜனம், மனக்குழப்பம்.

மிதுனம்:- எண்ணியது கைகூடும். மனைச்சிறப்பு உறவினர் வருகை எதிர்கால சிந்தனை, தொழில் பாராட்டு.

கடகம்: தொழில் மாற்றம், குடும்பத்தில் பிணக்கு, கடன் தொல்லை தூரத்துச் செய்தி, அந்நியர் உதவி

சிங்கம்:- உறவினர் கவலை, தொழில்லாபமின்மை, பயணங்களால் செலவு அறிஞர் சந்திப்பு, வாக்கு வன்மை

கன்னி:- மனப்போராட்டம், வைத்திய செலவு, தவறுன எண்ணம், குடும்பத்தில் கவலை, தொழில் பாதிப்பு.

துலாம்:-தொழில்பாராட்டு நண்பருதவி, பணவரவு, ஆதரவளித்தல், மனைட்பிணக்கு, ஆலய தரிசனம்.

விருச்சிகம்:- கண்ணில் ரோகம், அதிகாரிகள் தொல்லை, கடன்படல் தொழிலாளர் உதவி, நற்செய்தி.

தனுசு: காரிய தாமதம், கைப்பொருள் நழுவுதல், தொழில் லாபக்குறைவு. குடும்பத்தில் துன்பம்.

மகரம்:- மன மாற்றம், விருந்துபசாரம், கடிதஉறவு, அந்நியர் சகாயம், பொதுச் சேவை.

கும்பம்: புதிய முதலீடு, திருமணப்பேச்சுக்கள், பிரிந்தவர் கூடுவர், வேலைப்பளு, தந்தையர் உதவி.

மீனம்:- அவசர முடிவு, காரியதாமதம், பெண்நேசம், இராஜசன்மானம், தியாக சிந்தை.

### மணிவாக்கு

பணம் திரட்டுவதில் ஆசைகொண்டு ஆற்றலைச் செலவிடாமல் நாட்டுக்கு நன்மை செய்தலே மேலானது.

—மகாத்மா காந்தி

## நமது நோக்கு

### இப்படித் தேயலாமா அப்'படி'?

பணத்தின் பெறுமதி வேகமாக வீழ்ச்சி அடைந்து வருகின்றது; வன்செயல் போன்ற பல காரணங்களால் உற்பத்தி குறைந்து வருகின்றது; அன்னியச் செலாவணிப் பற்றாக்குறையினால் இறக்குமதிகள் பாதிக்கப்படுகின்றன.

விளைவு? மக்களின் வாழ்க்கைச்செலவு மிக வேகமாக ஏறிவருகின்றது.

அவசியத் தேவையான பொருட்களையே மக்கள் வாங்கத் திண்டாடுகிறார்கள். கிடைக்கும் வருமானத்திற்குள் பொருட்களை வாங்கவேண்டுமாயின் குறைந்தளவு பொருட்களையே வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

குறைவாக வாங்கப் போனால், மிகக்குறைவாகவே கிடைக்கின்றது, படிப் பிரச்சனையால்.

சமன்செய்து சீர்தூக்க வேண்டியது தராசு என்பதை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே வள்ளுவர் கூறியுள்ளார். படிப் பிரச்சனை அவர்காலத்திலும் இருந்ததோ?

நிறைகுறைந்து காணப்படுகின்றதே என்று யாராவதுகேட்டால், படிதேய்ந்து விட்டது என்ற 'சமாளிப்பு' வரும்.

அளந்து விற்றலிற் பல சிக்கல்கள் ஏற்பட்டதை அறிந்தே, பல பொருட்களை நிறுத்து விற்கும் பொருட் பட்டியலிற் சேர்த்தனர்.

தேய்ந்த படிகளாற் சிறுகச் சிறுகச் சேர்கிறது! சிறுதுளி பெருவெள்ளமாகிறது. ஆனால் பொதுமககள் பெருமளவிற் பாதிக்கப்படுகின்றனர்.

காய்கறிச் சந்தைகளிலேதான் இந்தப் படிப் பிரச்சனை பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துவதாகப் பொதுமக்கள் புகார் கூறுகிறார்கள்.

அவசரக் கோலத்தில், நெரிசலில், கொடுத்ததை வாங்கிச் செல்லும் பலர் நிறுத்தல் சரியாக நடைபெறுகிறதா. சரியான படிகள் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பதைக் கவனிக்கமுடியாதவர்கள்ஆகின்றார்கள்.

அரசாங்க விதிகளின்படி வியாபாரிகள் அனைவரும் பயன்படுத்தும் படிகள் யாவும் உரியமுறைப்படி 'சீல்' செய்யப்படவேண்டும்.

இந்த விதி எப்படியோ மீறப்படுவதற்குப் பல வசதிகள், வாய்ப்புகள் ஏற்பட்டு விடுகின்றன.

படிகளைப் பரிசீலிப்பதற்கும், முறையாகச் 'சீல்' செய்வதற்கும் சில வசதிக் குறைகள் இருந்தன.

புதிய கருவிகள் விரைவில் யாழ். செயலகத்திற்கு வந்துள்ளது. எண்பதாயிரம் ரூபா பெறுமதிமிக்க இக்கருவிகள் வந்ததால், அப்'படி'கள் மறைந்து, சீரான படிகள் பாவனைக்கு வந்துவிடும் என நம்புவோமாக.

''எப்பொருள் யார் யார்தான் விற்றாலும், அப்பொருள் மெய்நிறை காண்பது அரசு''—இது இருபதாம் நூற்றாண்டுக் குறள்.

எனவே அரச அதிகாரிகள், 'சீல்' வைப்பதோடு அமையாது. திடீர்ப் பரிசோதனைகளையும் நடாத்தி, தகுந்த தண்டனை வழங்கி, பொதுமக்களின் வேதனையைக் குறைக்க வழிசெய்ய வேண்டும்.

''சமன் செய்து சீர்தூக்கும் கோலைச் 'சீல்' வைத்து கோடாது விற்றல் வணிகர்க்கு அணி'' என்பதை வணிகப் பெருமக்களுக்கும் நினைவுபடுத்தி, ஒரு சிலரால் ஏற்படும் அவப்பெயரை நீக்க உதவவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

## தவக்கால நற்சிந்தனை

### சிலுவைகளிலிருந்து தப்பமுடியாது

தவக்காலம் என்னைப் பாஸ்கரத் திருவிழாவுக்கு சிறந்த முறையில் ஆயத்தம் செய்ய எனக்களிக்கப்பட்ட புனித காலம். பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல். இக் கடந்து செல்லுதலில் மூன்று கட்டங்களுண்டு. முதலாவது போராட்டத்திலிருந்து விடுதலைக்கு வெற்றிக்குக் கடந்து செல்லுதல். இதைபபற்றி இன்று சிந்திப்போம்.

இக்கண்ணீர்க் கணவாயில் நான் வாழும் காலத்தில் பற்பல போராட்டங்கள், சோதனைகள், சஞ்சலங்கள். இன்னல்கள் மத்தியில் என் வாழ்க்கைப்படகைச் செலுத்த வேண்டியுள்ளது. இவைகளிலிருந்து நான் வெற்றிவீரனாகக் கடந்து சென்று விடுதலையடையவேண்டுமானால் கிறிஸ்துவின் பாடுகளோடு ஒன்றித்து என் வாழ்வில் இறைவனால் அனுமதிக்கப்படும் சிலுவைகளைத் தியாக சிந்தையுடன் நான் ஏற்றுக்கொள்ளப் பழகவேண்டும். சிலுவைகளிலிருந்து எவரும் தப்பமுடியாது. ஆனலொன்று நம்மால் தாங்க முடியாத சுமையை இறைவன் நம்மேல் என்றுமே சுமத்தமாட்டார். அப்படித்தான் நாம் சில சமயங்களில் எண்ணினாலும் துன்பத்துக்கு ஒரு முடிவு உண்டு.

நான் தனியே வாழ்பவனன்று. சமுதாயத்தில் வாழ்பவன். எனது வாழ்க்கைப் போராட்டங்களிலிருந்து கடந்து சென்று விடுதலையடைய எத்துணை முயற்சிக்கிறேனோ அவ்வாறு எனது அயலாரின் போராட்டங்களிலும் அவர்களுக்கு உறுதுணையாக நின்று, அன்புக்கரம் நீட்டி அவர்களும் கடந்துசென்றுவிடுதலையடைய இத்தவக் காலம் எனக்குத் துணை நிற்கவேண்டும் ஒருவருக்கொருவர் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைக் குறைக்க நாம் துணை செய்யாது போனால் நாம் எதற்காக வாழ்கின்றோம்?' என்ற கேள்வி எழுப்புகிறார் ஜோர்ஜ் எலியட் என்னும் ஓர் ஆங்கிலேய எழுத்தாளர்.

லோ. வ. இராயப்பு
மா. ம. தி

அண்மைக் காலக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டு- அங்கமிழந்து - சொத்திழந்து- உடைமைகள் இழந்து-துணை இழந்து தவிக்கும் மக்களுக்குப் பொருளாதார உதவிகளையும், புனர் நிர்மாணப் பணிகளையும் கவனிக்வெனப் பல அரசு சார்பற்ற நிலையங்கள் இயங்குகின்றன. ஆனால் மேற்குறிப்பிட்ட அனர்த்தங்களினால் இன்று எமது மக்கள் அனுபவிக்கும் உளத் தாக்கங்களில் இருந்து அவர்களுக்கு விடுதலை அளிக்க அல்லது தமக்குள்ள தாக்கங்களைத் தாமே புரிந்துகொள்ள உதவும் வகையில் உளவளத் துணை ஸ்தாபனமாக நின்று இயங்கும் ஸ்தாபனம், யாழ்ப்பாணம் 'சாந்தீக'த்தில் உள்ள உளவளத் துணை நிலையமாகும்.

## உளவளத் துணைச் சேவை!

கடந்த காலக் கலவரங்களினால் உறவுகள், அன்பு, ஆதரவு. துணை என்பவற்றை இழந்தமையாலும் அவற்றினால் ஏற்பட்ட துயரம், கோபம், விரக்தி, அச்சம் இவைகளின் தாக்கமும், தனது நிலையை ஏனையோர் புரிந்து கொள்ளாமையினால் ஏற்படும் உளத் தாக்கம் உட்படப் பல் வகைப்பட்ட தாக்கங்களினால் சிதறிச் சின்னபின்னமாகியுள்ள எமது சமூகத்துக்கு இன்றியமையாத தேவை, உளவளத் துணை என்பதை நன்குரைத்து, சிறப்புப் பயிற்சி பெற்ற இருபது உளவளத் துணைவர்களுக்கு இன்று டிப்ளோமா பட்டமளிப்பு வைபவம் வெகு விமரிசையாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தொடர்பகத்தில் நடைபெறுகிறது.

எதிர்காலத்தின் தேவை அறிந்து, நெருக்கடி காலத்திலே பல்வேறு துறைகளைச் சார்ந்த இருபது பேரைத் தேர்ந்தெடுத்து, சிறப்புப் பயிற்சி அளித்த கலாநிதி சா. ம. செல்வரட்ணம் அடிகளார் அவர்களுக்கும், எஸ். தேமியன் அடிசளார் அவர்களும் செய்த அளப்பரிய சேவையால் தொடர்பகமும், 'சாந்தீகமும்' எமது மண்ணில் உயர்ந்து நிற்கின்றன.

உளவளத் துணை தேடி வருவோரை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு உற்ற துணையாக நின்றுழைக்கும் மேற்படி நிறுவனம் ஆற்றும் பணி, எமது மண்ணின வரலாற்றில் என்றும் நினைவு கூரப்படும்.

பால்-சாதி-இன-மத பேதங்களுக்கு அப்பால் நின்று, மனித நேயத்தை மதித்து-மனித உறவுகளை மேம்படுத்தவும் தனி மனித உள வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் அயராது உழைக்கும் 'சாந்தீகம்' உருவாக்கியுள்ள இருபது உளவளத் துணைவர்களும் (Counselers) பரந்து வாழும் எமது பிரதேச மக்களின் உளத் தாக்கங்களை அறிந்து இயங்க முடியுமா என்று ஒரு கேள்வி பூதாகரமாக எழுந்து நிற்பது இயற்கையே.

மேலும் பல உளவளத் துணைவர்களான மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார். வவுனியா, திருக்கோணமலை போன்ற பிரதேசங்களிலிருந்தும் தேர்ந்து எடுத்துச் சிறப்புப் பயிற்சி அளித்து, அத்துணைவர்கள் தத்தமது பிரதேசங்களில் உளவளத் துணை நிலையங்களை அமைத்து, அப்பிரதேச மக்களுக்குச் சிறப்பான சேவையை ஆற்ற 'சாந்தீக'மும்-தொடர்பகமும் ஆவன செய்தல் அத்தியாவசியமானதாகும்.

இன்று பட்டம் பெறும் உளவளத் துணையாளர்கள், எமது மக்களின் துயர் துடைக்க-சுயநலமற்ற-உன்னதசேவைக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளமைக்காக நாம் அவர்களை வாழ்த்துகிறோம்; பாராட்டுகின்றோம். இப்புனித சேவையால் எமது மக்களிடையே அனபு, கருணை, நல்லுறவுகள் வளர்வதாகுக.

—ஜனனி, சாலினி.
சுன்னாகம்.

## இஸ்லாமிய சிந்தனை

### இஸ்லாமிய ஒற்றுமைபற்றி அல்குர்ஆன்

இஸ்லாமியர்களின் ஒற்றுமையை பற்றி அல்லாஹ் தஆலா தன்னுடைய திருக்குர்ஆனில் பல இடங்களில் சுற்றி காட்டுகிறான். அதில் ஒரு ஆயத்தில் கூறுகிறான்! மனிதர்களே உங்கள் மீது அல்லாஹ புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள் நீங்கள் (ஒருவருக்கொருவர்) விரோதிகளாக(ப் பிரிந்து) இருந்து சமயத்தில் அவன் உங்கள் இதயத்தினால் அன்பையூட்டி ஒன்று சேர்த்தான் ஆகவே அவனுடைய அருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள் அல்குர்ஆண் (3-103)

இன்னொரு ஆயத்தில் கூறுகிறான். நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ் வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாக பற்றிப்பிடித்து கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விட வேண்டாம்.

அல்-குர்-ஆன் (3-103)

தொகுப்பு:
S. M. பௌசி
மன்னார்.

## சமயத்தை விளங்க வேண்டாமா?

**(1) மாசிமகம், மகாமகம் என்பதன் வேறுபாடு என்ன?**

வருடந்தோறும் மாசி மாதத்தில் பூரணையும் மகம் நட்சத்திரமும் கூடிவந்தால், மாசிமக புண்ணிய கால தீர்த்தமாகும்.

மகாமகம் என்பது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வருவது. மாசிமாதமும் பூரணையும், மக நட்சத்திரமும், வியாழன் சிங்கராசியில் நிற்கவும், பொருந்திவரும் புண்ணிய தீர்த்த காலமாகும்.

**(2) விரதம் என்றால் என்ன? அநுட்டிக்கும் முறை யாது?**

''மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விஷேசமாக வழிபடுதல்''விரதமாகும்.

விரதத்தை அனுட்டிப்பவர்கள் காலையில் எழுந்து நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைதரித்து, ஆலய தரிசனஞ் செய்து திருமுறை ஓதல், புராணம் படித்தல் கேட்டல், சிவதொண்டு செய்தல் நன்று. தம்மால் இயன்றவரையில் உணவைச்சுருக்கி தீர்த்தம், பால், இளநீர் அருந்துதல் உத்தமம். இயலாதவர்கள் ஒரு வேளை புற்கை, பழம் உண்ணலாம். மறுநாள் விரதத்தை இறக்குதல் என்னும் கருத்தில் பாரணம் செய்தல் வேண்டும்,

**(3) சூரிய வணக்கம் செய்வதன் விஞ்ஞான ரீதியான காரணம் என்ன?**

சூரியன் தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரம் காலையில் உதிக்கும் போதும், மாலையில் மறையும் போதும், நாம் வணங்க கண்ணின் தூரப்பார்வை சீர் திருந்துகிறது.

சூரியனின் கிரணங்கள் தீய கிருமிகளை அழிக்குந் தன்மையுடையது. இளங்கதிர்கள் உடலில் படும் போது சிலஉயிர்ச்சத்துக்கள் உண்டாக்கப்படுகின்றன. யோகாசனப் பயிற்சிகள் காலைச் சூரியனுக்கு வணக்கம். செலுத்தும்முறையில் அமைந்திருப்பதும் உடல் நலம் கருதியே.

தொகுப்பு:
சி. கலையரசி.

## பலதும் பத்தும்

### மதுவும் மாதும்!

மது அருந்தும் மாதர்கள் ஆண்களைவிட விரைவில் வெறிகொள்வதேன்?

இதுபற்றிக் கண்டறிந்துள்ளார்கள்.

நியூயோர்க்கிலுள்ள மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் சார்ஸ் லீபரும் அவருடைய உதவியாளர்களும்.

கண்டறிந்ததென்ன? பொதுவாகக் குடிக்கும் மது வயிற்றிற்குட் சென்றதும், ஒருவகை நொதியத்தினால் அது நடுநிலையாக்கப்படுகின்றது. எனவே மது நேரடியாகக் குருதியிற் கலப்பதில்லை.

இந்த விசேட நொதியம் ஆண்களைவிடக் குறைவாகவே பெண்களிடம் சுரக்கின்றதாம்! அதனால் மது வெகு விரைவாகக் குருதியிற் கலக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

விளைவு?...வெறி தலைக்கேறுகின்றது!

ஒரேயளவு நிறையுள்ள ஆண்கள், பெண்களை மது கொடுத்து ஆராய்ந்திருக்கிறார்கள். முப்பது வீதம் அதிகமான மது பெண்கள் குருதியில் விரைவாகக் கலந்துவிடுகின்றதாம்.

மது குடிப்பதை வழக்கமாக்கிவிட்ட பெண்களுக்கோ இந்த நொதியம் சுரப்பது வெகுவாகக் குறைந்துவிடும்.

வெறு வயிற்றோடு குடிப்பவர்களுக்கோ இன்னும் விரைவாக மது குருதியிற் கலந்துவிடுமாம்.

வேண்டவே வேண்டாம்!.......காலையிலே....... நினைத்தே பார்க்கவேண்டாம்!

வாணி

## தனியார் கல்வி நிலையங்கள் கருத்துக் கண்ணோட்டம்:

# பெற்றோர்கள் தமது குழந்தைகளை "நேசறி"க்கு,ரியூசனுக்கு அனுப்பிவிட்டால் கடமை முடிந்துவிட்டதாக கருதுகிறார்கள்!!

### செல்வன் கே. சிவபாலன்

(தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அவைத் தலைவர்)

ஒவ்வொரு மாணவனும் முழுமையான கல்வியைப் பாடசாலைகளில்தான் பெற முடியும். இது கடந்தகால வரலாற்று உண்மை. தமிழ்ப்பகுதிகளில் கடந்தசில ஆண்டுகளாக நிலவிய போர்க்கால சூழ்நிலைகளால் பாடசாலைகள் அனைத்தும் முழுமையாக இயங்கமுடியாமல் போயின. இதனால் தனியார் கல்வி நிலையங்களின் ஆதிக்கம் எமது தாயகத்தில் வேரூன்றத் தொடங்கின. இன்று நிலைமை மாற்றம் அடைந்து தமிழீழ விடுதலைப் புலிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ள அமைதியை தமக்கு சாதகமாக பயன்படுத்தி, தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைகளுக்கு பிரதியீடாக உருமாற்றம் பெறத் தொடங்கியுள்ளன. இதனை நாம் எமது மக்களை நேசிக்கும் காரணத்தால் அனுமதிக்கமுடியாது.

இதன் காரணத்தால் மாணவர் அவை சகல பாடசாலைகளையும் இருநேர பாடசாலைகளாகமாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளோம். ஆசிரியர் பற்றாக்குறை எந்தப்பாடசாலையில் உள்ளதென்பதை விபரம் திரட்டியுள்ளோம். கல்விப்பணிப்பாளர் எந்தவொரு பாடசாலையிலும் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக எமக்குத் தெரிவிக்கவில்லை. இந்நடவடிக்கைகள் சகல பாடசாலைகளையும் முழுமையாக இயங்கவும், மாணவர்கள் முழுமையான கல்வியைப் பெறவும் வழிசெய்துள்ளது என நம்புகிறோம்.

பாடசாலைகள் முழுமையாக இயங்கத்தொடங்கியதும், எந்தவொரு மாணவனும், மாணவியும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லவேண்டிய அவசியம் இருக்காது. எந்தவொரு பாடசாலை ஆசிரியரும் பாடங்களை பூர்த்திசெய்யவில்லை என்ற குறைபாடு இருக்கமுடியாது. மாணவர்களும் ரீயூட்டரிக்குச் சென்றால்தான் படிப்பிக்காததை படிக்கமுடியும் என்ற காரணத்தையும் முன்வைக்க நியாயமில்லை.

எமது தாயகத்தில் தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களுக்கு ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி அவர்களை உள்வாங்கி அவர்களது முழுநேரத்தையும் ஆக்கிரமித்து அவர்களை சுயமாக சிந்திக்கக்கூட நேரமில்லாமல் செய்துவருகின்றன. விளையாட்டு, சாரணியம், கலை சார்ந்த துறைகளில்கூட ஈடுபடமுடியாத வகையில்தடுத்துவிடுகின்றன. இப்பயங்கரமான சூழ்நிலை எமது சமுதாயத்தை எதிர்காலத்தில் எவ்வாறு பாதிக்கும் என்பதை தேச விடுதலை உணர்வுமிக்க ஒவ்வொருவருக்கும் நன்குபுரியும். இதனால்தான் பாடசாலை மாணவர்கள் முழுமையான கல்வியை பாடசாலைகளில் பெறும்போது பூரண அறிவும் அவனது உளவளமான ஆற்றல் பிறதுறைகளில் ஈடுபடும்போது அவன் புத்திஜீவியாக உருவாக முடியுமென உறுதியாக கூறுகின்றோம்.

இன்றைக்கு பல்கலைக்கழகங்களுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து செல்கிறவர்கள் பல்கலைக்கழகம் செல்லும்போதுதான் தனது நிலைபற்றி உணர்கிறார்கள். அவர்கள் தனியார் கல்விநிலையங்களால் புத்தக பூச்சிகளாக உருவாக்கப்பட்டிருப்பதை பிறமாவட்ட மாணவர்களுடன் பழகும்போது விளங்கிக்கொள்கிறார்கள். தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லாத மாணவர்கள் எவ்வளவு ஆற்றல் நிறைந்தவர்களாக, சகல துறைகளிலும் பூரணத்துவமிக்க மாணவர்களாக அவர்கள் இருக்கும்போது, குறிப்பாக யாழ் மாவட்ட மாணவர்கள் பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்களை பாடம்பண்ணி பெறுபேறுகளை தோற்றுவிக்கும் கல்வியைப் பெற்றிருப்பதை உணர்கிறார்கள். பெரிதும் கஷ்டப்பட்டு, பல்கலைக்கழகத்திலே கல்வியை ஆயிரக்கணக்கான நூல்களை படித்துத் தேடிக்கொள்ள வேண்டியுள்ளது.

சிலர் கூறுவதுபோல், தமிழ் மாணவர்கள் கடுமையாக போட்டியிட்டால்தான் பல்கலைக்கழக அனுமதி கிட்டும் என்கிறார்கள். அது தவறு இன்றைக்கு பல்கலைக்கழக அனுமதி விகிதாசார அடிப்படையில் நடைபெறுகின்றபோது தமிழர்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ற அனுமதி குறிப்பிட்ட அளவிற்கு கிடைக்கும்.

பெற்றோர்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பெற்றோரும் தமதுபிள்ளை ஐந்து வயதை அடைய முன்னரே நேசறிக்கு ரியூசனுக்குஅனுப்பி வைத்தால் தமது கடமை முடிந்து விட்டதாக எண்ணுகிறார்கள். காலையில் ரியூசன் இருப்பதால் வளர்ந்தபிள்ளைகள் கூட அதிகாலையில் எழுந்துவிடுவதாக கூறுவது எவ்வளது கவலையான விடயம். கற்பதைக் காலையில் படித்தால்தான் மனதில் பதியும் என்பார்கள் எவ்வளவு உணமை நமது எதிர்கால சந்ததி படித்ததைக்கூட மீண்டும் ஒருமுறை திரும்பிப்படிக்க நேரமில்லாமல் தனியார் கல்வி நிலையங்களில் எதைப்படித்து என்ன பயன்?

எத்தனையோ ஆசிரியர்கள் பாடசாலைகளில் ஒருபகுதியும். தனியார் கல்வி நிலையங்களில் மீதிப்பகுதியையும் படிப்பிக்கும்போது பணம் படைத்தவர்களே பயன் பெறுகிறார்கள். வறுமைக் கோட்டுக்கு, கீழே வாழும், சகல திறமையுமுள்ள மாணவன் பணமில்லாத காரணத்தால் பாதிக்கப்படும்போது யாரால் கவலை கொள்ளாமல் இருக்கமுடியும். இதனால்தான் தனியார் கல்வி நிலையங்களை மட்டுப்படுத்த முனைகிறோம்.

அனேகமான தனியார் கல்வி நிலையங்களே, இன்றைக்கு மாணவர்களிடையே கலாச்சார சீர்கேடுகளுக்கு துணை போகின்றன. பாடசாலைகளில் உள்ள ஒழுக்கக் கட்டுப்பாடுகளும், கண்காணிப்பும் தனியார் கல்வி நிலையங்களுக்கு இல்லை. ''சுதந்திரம்'' என்ற போர்வையில் இளைய சமுதாயம் எவ்வாறு பாதிப்புக்குள்ளாகி வருகிறது. பெற்றோருக்கு ரியூட்டறி செல்கிறோம் என்று கூறிவரும் மாணவர்கள் தவறான வழியில் செல்வதும் சகஜம். இது தவிர்க்கப்படுவதற்கு தனியார் கல்வி நிலையங்களை மட்டுப்படுத்துவது அவசியமானது.

சுருக்கமாகச் சொன்னால் தனியார் கல்வி நிலையங்கள் வளமான தமிழீழத்தைக் காண விழையும் மாணவ சமுதாயத்தை உணர்வுகளை மழுங்கடித்து சுயசிந்தனையை தடுத்து சமூகத்துக்கு பயனற்ற ஒரு புத்தகப்பூச்சியாக உருவாக்கி வருகிறார்கள். அதனை தடுத்து நிறுத்துவது தமிழ் ஈழமண்ணை நேசிக்கும் ஒவ்வொருவரது கடமை. (12)

# திருக்கேதீஸ்வரத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள்

(மன்னார்)

மகா சிவராத்திரி வைபவத்தின்போது, திருக்கேதீஸ்வரத்தில் வைத்து சாரணர் இயக்கம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மன்னார் கச்சேரி அலுவலகம் ஆகியவற்றில் கையளிக்கப்பட்ட அடையாள அட்டைகள், மணி பர்சுகள், பிரயாணப் பைகள் ஆகியவைகள் திருக்கேதீஸ்வரம் கிராம சேவை அலுவலர் ஜனாப் எஸ் இஸ்ஸதீன் பாதுகாப்பில் உண்டு. இவற்றுக்கு உரிமை கோருபவர்கள், ஆதாரம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள திருக்கேதீஸ்வரம் கிராமசேவை அலுவலரோடு தொடர்புகொள்ளவும்.

**தேசிய அடையாள அட்டைகள்**

640551216 வி, ஜெகநாதன் மனோகர், காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை.

612254117 வி, செல்லமுத்து செல்வராசா, கமலாசனி வீதி, சாவகச்சேரி.

651671990 வி, கந்தராசா பிரபாகரன், கெற்பேலி, உசன் சாவகச்சேரி.

407621778 எக்ஸ், மனோன்மணி மார்க்கண்டு, கண்டி வீதி நுணாவில்.

672310512 வி, ஆறுமுகம் சாந்தராசா, அந்தணத்திடல், கப்புதூ.

**தற்காலிக அடையாள அட்டைகள்**

கே. தவகுமார், இல. 9, புங்குடுதீவு. கே. பிரபாகரன், கெற்பேலி, மிருசுவில். தெய்வேந்திரன் நகுலேஸ்வரன் வண்ணார்பண்ணை வடமேற்கு. கே. சண்முகநாதன், வேம்பொடுகேணி, பளை.

**பாடசாலை அடையாள அட்டை**

சின்னத்துரை சர்வமோகன், நடராஜா ராமநாதன் வித்தியாலயம், புத்தூர்.

**மணி பர்சுகள்**

மாதகல் 787, 29ஸ்ரீ4807 தனியார் துறை மினிபஸ் சேவை சம்பவத்தாள் உள்ளடக்கிய மணிபர்சு. (பெயர் குறிப்பிடப்படவில்லை).

முருகன்படமும், தாடியுடன் கோடுச் சேர்ட் அணிந்துள்ள ஓர் ஆணின் புகைப்படத்துடன் கூடிய மணிபர்சு. (பெயர் குறிப்பிடப்படவில்லை).

9 ரூபா 50 சதத்தை உள்ளடக்கிய மணிபர்சு.

ரூபா 30-00 உள்ளடக்கிய மணிபர்சு, இரண்டு வெற்று மணிபர்சு.

இரண்டு பிரயாணப்பைகள், உடுபிடவைகளுடன். (ஒரு பை பூநகரி பஸ்ஸில் இருந்து ஒப்படைக்கப்பட்டது.)

### விபத்தில் பலியானார்

(மன்னார்)

மன்னார்-மதவாச்சி வீதியில் முள்ளிப்பள்ளம் என அழைக்கப்படும் சந்தியில், சிலாவத்துறையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும், மன்னாரில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஜனுப் நூன் என்பவர் அவ்விடத்திலேயே பலியானார். மற்றவர் ஆபத்தான நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இப்படியும் நடக்கிறது

கடந்த செவ்வாய்க்கிழமை பின்னிரவு.

கொழும்பு பொரளைப்பகுதியில், டி. எஸ். சேனநாயக்கா சந்தியில், இரு கார்கள் உரசிக்கொண்டன. அதாவது; முன்னே சென்ற காரை பின்புறமாக வந்த ஒரு கார் உரசி சிறுசேதத்தை ஏற்படுத்திவிட்டு முன்னேறியது. விடுவாரா முன்வந்த கார்க்காரர். துரத்திச் சென்று மடக்கிப்பிடித்தபோது, சற்றுநேரம் வியந்தே போனார். காரணம்?

உரசப்பட்ட காரில் இருந்தவர் பொலிஸ் அத்தியட்சகர். சேதத்தை ஏற்படுத்திய காரில் இருந்தவர் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்.

சில நிமிடங்கள் ஓடிமறைந்திருக்கும். பொலிஸ் அத்தியட்சகர் அந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரையும் கார் சாரதியையும் பொறளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்.

என்ன விஷயம் புரிகிறதா?

சேதப்படுத்திய காரில் வந்த உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் உண்மையிலேயே இன்ஸ்பெக்டர் அல்ல! பொலிஸ் சீருடையில் வந்த ஒரு நடிகர். அதாவது மாளிகாவத்தையில் இடம்பெற்ற ஒரு படப்பிடிப்பில் இன்ஸ்பெக்டர் வேடத்தில் நடித்துவிட்டுஅதேசீருடையில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே மேற்படிச் சம்பவம் (அசலும் - நகலும்) நடந்தது!

ஒரு குறிப்பு: குறிப்பிட்ட அந்த நடிகர், தொலைக்காட்சி நாடகத்திலும் நடிப்பவர் அலுமட்டுமல்ல புகழ்பெற்ற சிங்களப் பாடகரின் மகனும், பாடவும் கூடியவர்.

மேலதிகத் தகவல்: ஒரு திரைப்படத்தில் பொலிஸ் அதிகாரிவேடத்தில் பொலிஸ் சீருடையில் நடிப்பதென்றால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் அங்கீகாரம் முன்கூட்டியே பெறவேண்டும். அதுமட்டுமல்ல; நடித்துவிட்டு பொலிஸ் சீருடையில் அவர் வெளியே நடமாடக்கூடாது. பிரயாணம் செய்யவும்கூடாது. சட்டப்படிஇது குற்றமானது.

''ஊடுருவி''

## காங்கேசன்துறை அமைதிப்படை முகாமிலிருந்து அனைவரும் விடுதலை

(வடமராட்சி)

காங்கேசன்துறையில் இந்திய அமைதிப்படையினரின் தடுப்புக் காவலில் இருந்த அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தற்போது அங்கு எவருமில்லை என்று அமைதிப்படைத் தளபதி ஜெனரல் ஆர். என். பல்லா தெரிவித்துள்ளார்.

இதனை வல்வை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எஸ். செல்வேந்திராவும் தெரிவித்துள்ளார். காங்கேசன்துறை இந்திய அமைதிப்படை முகாமிலிருந்து எவரும் காணாமல் போகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் இருப்பவர்களைத் தவிர்ந்த ஏனையோர் பற்றிய எவ்வித தகவல்களும் தங்களால் தரமுடியாது எனவும மேற்படி ஜெனரல் தெரிவித்துள்ளதாக பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

இருப்பினும் வேறு இடங்களிலிருந்து காணாமற் போனவர்களின் குடும்பத்தினர் நிவாரணம் பெறுவதற்கான ஒழுங்குகளைத் தாம் அவர்களுக்குக் கிடைக்கச்செய்து வருவதாகவும் தெரிவித்தனர். (51)

## "பாரதியார் வகுத்த நேர அட்டவணை"

(சித்தன்கேணி)

''பாரதியார் அந்தக் காலத்திலேயே எங்களுக்கு மிகவும் சிறந்ததொரு நேரஅட்டவணையைத் தயாரித்துக்கொடுத்திருக்கிறார். காலையில் எழுந்ததும் படிப்பு மாலையில் விளையாட்டு சோம்பலாக இருக்கக்கூடாது என்பதை பாடல் மூலம் கூறியிருக்கிறார் இதை நீங்கள் எல்லாரும் பின்பற்றி நடக்கவேண்டும்.

இவ்வாறு வடமாகாண சங்கீத கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை காரைநகர் வாரிவளவு நல்லியக்கசபையினரால் நடாத்தப்பட்ட தேவார, சங்கீத போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சபையின் செயலாளர் திரு. ச. பத்மநாதன் தலைமையில் போட்டி நடைபெற்றது.

போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் இருந்து பெருந்தொகையான மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

இவர்களுக்கான பரிசில்கள் நாளை சனிக்கிழமை பிற்பகல் காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபை திறந்தவெளி அரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளது. (137)

## சென். ஜோன்ஸ் - பற்றிக்ஸ் இன்று மோதுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட்போட்டி இன்றும், நாளையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டி இன்று பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகும். (வி)

## வடமராட்சி உ. அ. அ. பிரிவு

# ஆசிரியர் பயிலுநர் தெரிவானோர் விபரம்

(புலோலி)

மாவட்ட ஆசிரியர்கள் சேவைத் திட்டத்தின்கீழ் ஆசிரிய பயிலுநராக வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 69பேர்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆரம்பக் கல்விக்கு 14 பேரும், இந்து சமயத்துக்கு 02 பேரும், றோமன் கத்தோலிக்கத்துக்கு 03 பேரும், றோமன் கததோலிக்கரல்லாதது 02 பேரும், தமிழுக்கு 02 பேரும், சிங்களத்துக்கு 02 பேரும், விஞ்ஞானத்துக்கு 04 பேரும், ஆங்கிலத்துக்கு 05 பேரும், உடற்பயிற்சிக்கு 02 பேரும், சமூகக் கல்விக்கு 02 பேரும் சித்திரத்துக்கு 05 பேரும், சங்கீதத்துக்கு 07 பேரும், நடனத்துக்கு 08 பேரும், விவசாயத்துக்கு 02 பேரும், வினைப் பொருளியலுக்கு 02 பேரும், வர்த்தகத்துக்கு 02 பேரும், தட்டச்சுக்கு 02 பேரும், மரவேலைக்கு ஒருவரும், மோட்டார் பொறியியலுக்கு ஒருவரும், வானொலிப் பொறியியலுக்கு ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கீழ்த்தரப்படும் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர்களது சுட்டிலக்கம் முதலாவதாகவும், பெயர், விலாசம் இரண்டாவதாகவும், அவர்கள் பெற்ற புள்ளிகள் மூன்றுவதாகவும் இடம்பெறுகின்றன.

ஆரம்பக் கல்வி

0008. த. வசந்தா, வதிரி (619). 0173. சி. இரத்தினேஸ்வரி, சமரபாகு (619). 0659. க. கிருபாலமூர்த்தி, வல்வெட்டித்துறை (617). 0852. திருமதி வ. சிவரஞ்சினி, வதிரி (611). 0074. இராசசுலோசனு, வதிரி (610). 1106. சி வசந்தலீலா, வல்வெட்டித் துறை (609). 0043. சி. அன்னராணி, அல்வாய் கிழக்கு (604). 0007. தி. சாந்தினி, துன்னாலை தெற்கு (598). 0097. ஆ. பகீரதன், நெல்லியடி (589). 0004. ந. விமலேஸ்வரி, அல்வாய் கிழக்கு (584). 0102. து. வாசுகி, நெல்லியடி (583). 0175. ஆ. விமலேந்திரன், அல்வாய் கிழக்கு (583). 0014. திருமதி இ. புஸ்பராணி, துன்னாலை (577). 0481. இ. கௌரி, அல்வாய் தெற்கு (575).

இந்து சமயம்

0411. இ. தவமணி, வல்வெட்டி (712). 0176. க. சந்திரவதனு, கரணவாய் தெற்கு (675).

றோமன் கத்தோலிக்கம்

0052. தா. யஸ்மின், நெல்லியடி (584). 0056. மேரி சாமவிற்று ஞானமலர், கரவெட்டி மேற்கு (576). 0403. ம. டொறன் புஸ்பராணி, நெல்லியடி (490).

றோமன் கத்தோலிக்கம் அல்லாதது

0441. வே. கிருபை நேசகுமாரி, வதிரி (361). 1302. கி. சுபாஷினி, அல்வாய் தெற்கு 352)

சிங்களம்

0063 தி. கிருஷ்ணகுமாரி கரவெட்டி கிழக்கு (401), 0702 யோ. ஜசிந்தா கரவெட்டி மேற்கு (404).

விஞ்ஞானம்

0083 செல்வி கு. அப்புத்துரை இமையாணன் [647], 0002 வ. உதயமலர் கரவெட்டி [638], 0235 க. பத்மலதா அல்வாய் தெற்கு [638], 0109 ச. தேவமாலினி வதிரி [623],

ஆங்கிலம்

0178 க. சுப்பிரமணியம் அல்வாய் கிழக்கு [604], 0502 செ. சிவலிங்கராசா இமையாணன் [603]. 1104 சா. தேன்மதி அல்வாய் தெற்கு [542], 0739 வ. கெங்கா நெல்லியடி [528], 0734 கு. மேகலா நெல்லியடி [524],

உடற்பயிற்சி

0755 ச. விஷ்ணுகுமார் துன்னாலை தெற்கு [505], 0678 இ. இராசமலர் வதிரி [527],

சமூகக்கல்வி

0231 சி. தர்மலிங்கம் அல்வாய் கிழக்கு [599], 0073 த. உமா அல்வாய் தெற்கு [576],

சித்திரம்

0973 செ. செல்வராணி துன்னாலை தெற்கு [540], 06υε சி. மகேஸ்வரி இமையாணன [538], 0115 ம. சிக்கிரா கரவெட்டி கிழக்கு [52`], 1333 கி. விஜயகுமார் கரவெட்டி மேற்கு [502], 1235 இ. யோகாம்பிகை துன்னாலை தெற்கு [497],

சங்கீதம்

0082 இ. நாகேஸ்வரி உடுப்பிட்டி [682], 0134 த. பார்த்திபன் கரவெட்டி வடக்கு (618), 0089 க இராசகுமாரி கரவெட்டி கிழக்கு [604] 0139, ம. யோகேஸ்வரி கரவெட்டி வடக்கு (592), 0:99 க. அனுஷியா நெல்லியடி (543), 0136 திருமதி ஐ. குணரத்தினம் கரவெட்டி வடக்கு (524) 0128 க. சத்தியபாமா துன்னாலை தெற்கு (517).

நடனம்

0144 க. மலர்விழி நவிண்டில் (618), 0157 செ. நிர்மலா துன்னாலை தெற்கு (582) 0142 கு. கீதாஞ்சலி கரவெட்டி வடக்கு [518] 0154 செ. சூரியகலா துன்னாலை தெற்கு [510] 0574 த லலிதாராணி வதிரி [503] 0658 கு. தமயந்தி துன்னாலை தெற்கு [447] 0145, ம. அனந்தீஸ்வரி கரவெட்டி மேற்கு [447] 1185 திருமதி வி. தேவி கரவெட்டி மேற்கு [479]

விவசாயம்

0077 இ. சாரதா வதிரி [710] 0015 த. மஞ்சுளாதேவி அல்வாய் கிழக்கு [629]

வினைப்பொருளியல்

0366 இ. தேவரஞ்சினி வதிரி [5υ3] 0038 வ. யோகேஸ்வரி துன்னாலை தெற்கு [546]

வர்த்தகம்:

0064 ச. சரோஜாதேவி அல்வாய் கிழக்கு [708], 0177 திருமதி ம. மஞ்சுளா கல்லுவம் [604]

தட்டச்சு:

0967 த. றேஸ்ஜெகதீஸ்வரி கரவெட்டி (435), 0752 இ. வெஸ்மதி கரணவாய் தெற்கு (417)

மரவேலை

0001 த. ராஜசேகரன் சமராகு (560).

மோட்டார் பொறியியல்:

0820 க. மகதேவா அல்வாய் தெற்கு (497)

வானொலிப் பொறியியல்

1003 க கனகேஸ்வரன் துன்னாலை வடக்கு (572)

(61)

## போராளிக்கு சிலை

(மாங்குளம்)

இந்திய அமைதிப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் ஒட்டிசுட்டான் கப்டன் வீரமரணமடைந்ததையிட்டு அவருக்கு ஒட்டுசுட்டானில் சிலை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவரின் நினைவாக அவரது பெயரில் முத்தையன்கட்டு வலதுகரை 2ம் கண்டத்தில் சிறுவர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. இராணுவத்தினர் மறைந்திருந்து யுத்த நிறுத்தவேளையில் சுட்டதில் மேஜர் தங்கேஸ் வீரமரணமடைந்ததையிட்டு அவரது நினைவாக 80 ஆயிரம் ரூபா செலவில் பஸ்தரிப்பு நிலையம் நிறுவப்படவுள்ளது.

அப்பகுதி விவசாயிகளின் முயற்சியால் சிறுவர் பாடசாலை 60 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

## மாவட்ட உடற்பயிற்சி போட்டிகள்

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மாவட்ட உடற் பயிற்சிப் போட்டி, மார்ச் மாதம் 15ம் திகதி நடைபெறும்.

யாழ்ப்பாணக் கோட்டப் போட்டிகள் மார்ச் மாதம் 3ம் திகதியும், மருதனுமடம் கோட்டப் போட்டிகள் மார்ச் 5ம் திகதியும், வேலணை கோட்டப் போட்டிகள மார்ச் 6ம் திகதி பண்டத்தரிப்பு கோட்டப் போட்டிகள் மார்ச் 7ம் திகதியும், வடமராட்சிக் கோட்டப் போட்டிகள் மார்ச் 9ம்திகதியும் நடைபெறும்.

இத்தகவல்களை உடற்கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிராசா தெரிவித்தார்.

மெய்வல்லுநர் போட்டிகள், கொத்தணி மட்டத்தில் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னரும். கோட்ட மட்டத்தில் மார்ச் 16ம் திகதிக்கு முன்னரும் நடத்தி முடிக்கப்படவேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

# பாதசாரிகளே பயணம் செய்யமுடியாத வீதி இது!

(நாவற்குழி)

கைதடிச சந்தியையும், கைதடி வடக்கையும் இணைக்கும் கைதடி வடக்கு வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

இவ்வீதி பல ஆண்டுகளாக எந்தவித திருத்தமுமின்றி மோசமான நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. சில ஆண்டுகள் வரை இலங்கை போக்குவரத்துச் சபையினுல் பஸ்சேவை நடாத்தப்பட்ட இப்பாதை இன்று துவிச்சக்கரவண்டிகூட ஒழுங்காக ஓடமுடியாத நிலையில் மோசமான நிலையை அடைந்துள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பயணம் செய்யும் இப்பாதை, பாதசாரிகளே நடக்க முடியாத அளவிற்கு மோசமடைந்துள்ளது. இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று இப்பகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறுர்கள். (107)

# யாழ். பழைய செயலகப் புனரமைப்பு

(மானிப்பாய்)

யாழ். பழைய செயலகம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கென 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்செயலகத்தில் தற்பொழுது நில அளவையாளர் அலுவலகம் மாத்திரமே இயங்கி வருகின்றது. (71)

## 'விடிவெள்ளி பூத்தது'

# யாழ்ப்பாணத்துஒருசாராரின் வாழ்க்கைப் பிரதிபலிப்பு

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் வாழ்க்கை, அவர்களுடைய பிரச்னைகள், எண்ண அபிலாசைகள்—இவைகளை மையமாக வைத்து ஈழத்துச் சோமு 'விடிவெள்ளி பூத்தது' என்ற நாவலை எழுதியுள்ளார்.''

இவ்வாறு இந்துசமய தமிழ் அலுவல்கள் ராசாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் 'ரக்சண மந்திரய' கட்டடத்தில் நடைபெற்ற நாவல் அறிமுக விழாவில் குறிப்பிட்டார்.

முதல் பிரதியை பிரபலநூல் வெளியீட்டாளரும், எழுத்தாளருமான வரதர் பெற்றுக்கொண்டார். 'வீரகேசரி ஆசிரியர்' திரு சிவநேசச்செல்வன், 'தினகரன்' ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன், மற்றும் பிரபல படைப்பாளிகள் செங்கை ஆழியான், சாரல் நாடான், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பகுதித் தலைவர் திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் ஆகியோர் நூல்கள் பற்றிய ஆய்வுரைகள் செய்தார்கள். (ம)

## குடைச்சுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

குடைச்சுவாமி அவர்களின் வருடாந்த குருபூசை நாளை சனிக்கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகா ஆலயத்தில் உள்ள சுவாமிகளின் சமாதியில் நடைபெறும்.

## மா இறக்குமதி

[மானிப்பாய்]

திருகோணமலையிலிருந்து 990தொன்மாவுடன் 'றுகுணு' என்ற கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துள்ளது.

இறக்குமதி வேலைகள் நடைபெறுவதாகவும் போதியளவு மா கையிருப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிலது. (71)

# அம்பாறை மாவட்டத்தில் கடல் அரிப்பு அதிகரிப்பு

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப்பிரதேசத்தில் கடல் அரிப்பு மிகவும் மோசமான நிலைக்கு வந்துள்ளது. முக்கியமாக கல்முனைப்பகுதியிலும், கல்முனைக்குடிப்பகுதியிலுள் கரையோரப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் வீடுகளையும், உடமைகளையும் இழந்துள்ளார்கள்.

கல்முனைக்குடி கடற்கரையிலுள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற கடற்கரைப் பள்ளிவாசலின் கொடிக்கம்பக்கோபுரம்கூட எந்த நேரத்திலும் சரிந்து விடக்கூடிய அளவுக்கு கோபுரத்திற்கு மிகவும் அண்மையில் கடல் அரித்துக் கொண்டே வந்துள்ளது.

கடந்த பத்துவருடங்களுக்கு முன்னர் கடல் சுமார் அரை மைலுக்கு அப்பால் இருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறுர்கள். கல்முனை கடற்கரை ஓரத்தில் பலகோடி ரூபா செலவில் வெளிநாட்டு உதவியுடன் அமைக்கப்பட்ட ஐஸ்-குளிர்சாதனம் – உற்பத்தி தொழிற்சாலையின் வாசலுக்கே கடல் அரித்துக் கொண்டு வந்துள்ளதோடு கட்டிடத்தின் பெரும் பகுதியும் சேதமடைந்துள்ளது.

கல்முனை கடற்கரைப்பிரதேசத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேல் கடல் அரிப்பு இருந்துகொண்டு வருகிறது. இதற்கான பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பாருங்கற்கள் கரையோரம் முழுவதும் போடுவதற்கான நடவடிக்கைகள் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவை முழுமையாக செயல்படாதகாரணத்தினுல் இப்போது மிகவும் மோசமாகவே தினசரி கடல் அரிப்பு நடைபெற்றுக்கொண்டுவருகிறது. (142)

# "உடல் வலுவும் ஆரோக்கியமும் மாணவருக்குத் தேவை"

(யாழ்ப்பாணம்)

''மாணவர்கள் தமது கல்வியில் உயர்வடையவும் விளையாட்டுத்துறையில் சிறக்கவும் ஏனைய கூட்டுகலைத் திட்டங்களைக் கற்று வாழ்வில் முன்னேற உடல் வலுவும், திடகாத்திரமும். ஆரோக்கியமும் அவசியமாகும். இதற்கு ஜனுதிபதி பிரேமதாசாவின் மாணவர்களுக்கான மதிய உணவுத்திட்டம் ஒருவரப்பிரசாதமாகும் என்று யாழ் வைத்தீஸ்வர முன்னுள் ஆசிரியரும் உபஅதிபருமான திரு. எஸ். இராஜதுரை வித்தியாலய மாணவர்களால் தமக்களிக்கப்பட்ட பிரியாவிடை வைபத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாற்பத்து இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் சேவையிலும் உபஅதிபராகவும் யாழ். வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் தொடர்ச்சியாகக் கடமையாற்றி வித்தியாலய வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உழைத்திட்ட திரு. எஸ். இராஜதுரைக்கும் இருபது ஆண்டுகள் வித்தியாலயத்தில் ஆசிரியராக, நூலகப்பொறுப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. தம்பிநாயகத்துக்கும் பாடசாலை விவேகானந்தா மண்டபத்தில் பாடசாலை மாணவர்களால் சேவை நலம்பாராட்டலும் பிரியாடை வைபவமும் நடாத்தப்பெற்றது.

இக்கூட்டத்தில் வித்தியாலய ஆசிரியர் கழகத்தலைவர் திரு. என். வன்னியசிங்கம் ஆசிரினய குணமணி சண்முகதாஸ், ஆசிரியர் திரு. எஸ். கே. சுந்தரலிங்கம் மாணவர்கள், மாணவிகள் உரையாற்றினுர்கள். இவ்விழாவுக்கு பாடசாலை புதிய உபஅதிபர் திரு எஸ். பாலசிங்கம் தலைமை தாங்கினுர். கூட்டம் நிறைவுபெற்றதும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் சகிதம் திருமதி இராஜதுரை திரு திருமதி தம்பிஞயகம் ஆகியோர் மங்களவாத்தியம் இசைகக ஊர்வலமாக வீடு வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

## பாடசாலை கிரிக்கெட் போட்டி:

# சென். ஜோன்ஸ் கோஷ்டி இன்னிங்ஸால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் டி. முரளியின ஆட்டம் சிறப்பாக இருந்தது. இவர் 93 ஓட்டங்களையும், 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி மொத்தம் 186 ஓட்டங்களைப் பெற்றது. பிரதீபராஜா சிறப்பாக விளையாடி 60 ஓட்டங்களையும், சுதாகரன் 34 ஓட்டங்களையும், பிரேமசீலன் 25 ஓட்டங்களையும் பெற்றனர் ஜேகேந்திரன் 48 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளையும், பிரஸாந்தனும் 48 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

சென் ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 340 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. டி. முரளி 93 ஓட்டங்களையும், கே. பிரஷாந்தன் 85 ஓட்டங்களையும், எஸ். விபிஷ்ஞு 45 ஓட்டங்களையும் பெற்றனர் பிரதீபராஜா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி 2வது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 104 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்ரீகரன் 24 ஓட்டங்களைப் பெற்றார். பிரஷாந்தன் 25 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், முரளி 51 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தாலும், 50 மேலதிக ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

இப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

## "விளையாட்டில் கூடுதல் கவனம் வேண்டும்"

(நாவற்குழி)

''வாழ்க்கையில் சுகதேகியாக இருப்பதற்கு விளையாட்டு அவசியம் அதனாலேயே இன்று அது ஒரு பாடமாகக்கூட பாடசாலையில் படிப்பிக்கப்படுகின்றது''. என்று கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா குறிப்பிட்டார்.

அதிபர் திருமதி ஆர். தேவபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. தியாகராசா தொடர்ந்து பேசுகையில் தற்பொழுது பெண்கள் மட்டுமதன் போட்டிகளில் பங்குபற்றுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆண்களும் அதிகமாகப் பங்குபற்ற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

போட்டிமுடிவில் விபுலானந்தர் இல்லம் 335 புள்ளிகளைப் பெற்று ஐந்து அதிகப்படியான புள்ளிகளால் முதலிடத்தைத்தட்டிக் கொண்டது. நாவலர் இல்லம் 330 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும, இராமநாதர் இல்லம் 269 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (107)

## தமிழ்த்தின போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக பிரதேசத்திலுள்ள பாடசாலைகளிடையே தமிழ்த்தின போட்டிகளை இந்த முதலாம் தவணைக்குள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் இறுதிப்போட்டி அகில இலங்கை ரீதியில் மே மாதம் 8ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதால் அதற்கு முன்னதாக இத் தவணையில் தமிழ் தினப் போட்டியை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக உதவி கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இத் தமிழ்த்தினப் போட்டிகளில் மரபு வழி கூத்துகளையும் காத்தவராயன், நல்ல தங்காள் போன்ற நாடகங்களையும் அடிப்படையாக வைத்து அவற்றை பிரபல்யப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்சப்படுமென்றும் திரு. சிவானந்தன் தெரிவித்தார். (72)

## வலி. மேற்கு பிரிவில் விற்பனை முகவர் நியமனம்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 25 கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் வியாபார சலுகைகளை விஸ்தரிக்கும் முகமாக வர்த்தக கப்பற்துறை அமைச்சு ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவுக்கும் ஒவ்வொரு முகவரை நியமனம் செய்வதற்கு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் வியாபாரிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் உட்பட கூ. மொ வி.ஆல் விற்கப்படும் அத்தியாவசியப் பொருள்களை விசேட விலையில் வழங்குவதற்கும், தட்டுப்பாடான காலங்களில் விநியோகிப்பதற்கும் சம்பந்தப்பட்ட அமைச்சு முடிவு செய்துள்ளது

இம்முகவர்கள் மூலம் அவ்வவ் பகுதியில் உற்பத்தியாகும் விளைப் பொருள்களும் கூ. மொ வி. ஸ்தாபனத்தால் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் 25 கூ. மொ வி. ஸ்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை நியமனம் செய்வதகு உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (137)

## இந்தியப் படையினரால் கைப்பற்றப்பட்டவாகனங்கள் திருப்பி ஒப்படைப்பு

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் இந்திய இராணுவத்தினரால கைப்பற்றப்பட்ட அனைத்து வாகனங்களும் பெறுமதிமிக்க பொருட்களும் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜெனரல் பல்லா தெரிவித்துள்ளார்.

கடந்தகால இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பெறுமதிப் பொருட்கள் சிலவும் உரியவர்களுக்குக் கிடைக்கும் வண்ணம் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபரிடம் இந்திய இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்குரியவர்கள் பொருளிற்குரியவர்கள் என்ற அத்தாட்சிகளைக்காட்டி இவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் ஜெனரல் பல்லா தெரிவித்துள்ளார். (51)

## அடையாள அட்டைகள் ஒப்படைப்பு

(புலோலி)

பருத்தித்துறை இந்தியப் படை முகாமில் பொதுமக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தேசிய அடையாள அட்டைகள் பருத்தித்துறை பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறையிலிருந்து இந்தியப்படை விலகிச் சென்றபோது பொதுமக்களிடமிருந்து பறிக்கப்பட்ட இத்தேசிய அடையாள அட்டைகளை பருத்தித்துறை பிரஜைகள் குழுவிடம் ஒப்படைத்ததையடுத்து இவற்றிற்குரியோர் பருத்தித்துறை குமார் அச்சகத்தில் வைத்து பருத்தித்துறை பிரஜைகள்குழு உறுப்பினர் திரு. க. காந்திதாசனிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (61)

## அரசு, கூட்டுத்தாபன ஊழியர் தொகை மதிப்பீடு

(சித்தன்கேணி)

நாடு பூராவும் உள்ள அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களின் தொகைமதிப்பீடு மே மாதம் 31ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தொகை மதிப்பீடு புள்ளி விபரத்திணைக்களம் மேற்கொண்டுள்ளது,

இந்த ஆய்வுக்காக ஒவ்வொரு ஊழியருக்கும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவம் (கேள்விக் கொத்து), தொகை மதிப்பு புள்ளி விபர திணைக்களத்திஞல் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்தப் படிவத்தை திணைக்களத்திஞல் நியமிக்கப்பட்ட அதிகாரிகளே பூரணப்படுத்துவார்கள் மேலும் இந்தப் படிவத்தில் ஒரு ஊழியரைப் பற்றிய சகல விபரங்களும் கேட்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆறு ஆண்டுக்கொரு முறை திரட்டப்படும் இந்த விபரத்தின் ஆரம்ப மதிப்பு மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் திரட்டப்படல் வேண்டும். (137)

## மதிய உணவுப் பணம் கிடைப்பதில் தாமதம்

அதிபர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குமதிய உணவுக்காக முற்பணமாக வழங்காத நேரங்களில் அதிபர்கள் கடைக்காரரிடம் தஞ்சமடைய வேண்டியிருப்பதாக அதிபர்கள் சிலர் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ் திணைக்களத்திலிருந்து மதிய உணவுக்காக செலவழித்த பணம் இரண்டொரு தினங்களில் மீளப் பெற்ருல் தான் அதிபர்கள் மாணவர்களுக்கு கஷ்டமின்றி மதிய போசனத்தை வழங்கக்கூடியதாக இருக்கும் என சில அதிபர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்

இல்லாதுபோனுல் அதிபர்களை பொறுத்தமட்டில் மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்குவதில் கஷ்டத்தைதான் தொடர்ந்தும் எதிர்நோக்க வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தொண்டர் ஆசிரியர் பெயர்ப் பட்டியல், பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பு

(பண்டத்தரிப்பு)

தொண்டர்ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ் பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக பிரிவை சேர்ந்த 291 தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு யாழ் மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளரிடம்சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

இவர்கள் இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று சேவையில் உள்ளவர்கள் என்றும் இவர்களில் 41 பேர் தொண்டர் ஆசிரியராக ஐந்து வருடசேவையைபூர்த்தி செய்துள்ளார்கள் என்றும் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக உதவி கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவது தெரிந்ததே. (72]

## 12 பேருக்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களம் பன்னிரெண்டு பேரை உதவித் தொழில் ஆணையாளராகப் பதவி உயர்வு வழங்கியுள்ளது.

இவர்களில் மூவர் யாழ்ப்பாணத்தொழில் திணைக்களத்தில் பணியாற்றியவர்கள், பதவி உயர்வு பெற்ருேரின் விபரங்கள் வருமாறு:

திருவாளர்கள்: எஸ். வி. நவரத்தினம், ஏ நயில்ஸ் ஏ. பி. விக்ரமசிங்க, எல். எல். உமாலெப்பை, ஏ. சச்சிதானந்தஜோதி ஆர். தர்மலிங்கம், பி. லொச்குலியனகே வீ நடராஜா, எஸ். வன்னியாராட்சி, யு. பி. மரவல, ஏ. எம். அபேரத்தின, திருமதி எச். பி. மூனமலே.

இவர்கள் அனைவரும் முன்னர் பணியாற்றிய இடங்களிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (12)

## மருந்து இல்லை

(வடமராட்சி)

மந்திகை வைத்தியசாலையில் விசர்நாய்கடி தடுப்பூசி மருந்து இல்லை. கடந்தமாதம் முதல் மேற்படி மருந்து இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திருட்டு மின்சாரம், மின் மானிகளில் மோசடி:

## யாழ். மாநகரசபை, மின்சார சபை

# ஊழியர் உஷார் நடவடிக்கை!

## 25 பேர் அபராதம் செலுத்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைப் பகுதிகளில் களவாக மின்சாரம் பெற்றமை, மின் அறவிடும் மின்மானிகளில் மோசடி செய்தது போன்ற குற்றங்களுக்காக இருபத்தைந்து பேர் பிடிபட்டுள்ளதாக மாநகரசபை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களது மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதுடன், இப்படியான மோசடிகளில் ஈடுபடுபட்டவர்களின் கருணை மனுவின் அடிப்படையில் இரண்டாயிரம் ரூபாய் அபராதத் தொகையாகவும், மின் கம்பங்களில் மோசடி செய்த காலத்துக்கு இரு வருட தண்டனையாக ஐந்நூறு ரூபாவும் செலுத்தியபின்னர் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியான மோசடிகளைக் கண்டுபிடிக்க, மின்சார சபை ஊழியர் குழு தினமும் ஐந்து வீடுகளில் மின்மானியைப் பரிசீலனை செய்துவருகின்றது. களவாக மின்சாரம் திருடப்படுவதால் யாழ். மாநகர சபைககுத் தினமும் 40 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

மின்மானிகள் பழுதடைந்தோ அல்லது செயல்படாமல் இருந்தால் வரியிறுப்பாளர்கள் உடனடியாக யாழ்ப்பாண மாநகரசபை மின்சாரப் பகுதிக்கு அறிவிப்பதன்மூலம் இதனுல் ஏற்படவிருக்கும் அசௌகரியங்களைகுறைக்கலாமென்று யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம்தெரிவித்தார். (12)

# "தமிழரின் உரிமை பறிக்கப்பட்டபோது முதலில் குரல் எழுப்பியவர் எஸ். ஜே. வி.

## நூல் வெளியீட்டு விழாவில் கருத்து

(யாழ்ப்பாணம்)

சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களுக்கெதிராக தந்திரோபாயங்களையும் சூழ்ச்சிகளையும் கைக் கொண்டு எம்மை அடக்கி ஒடுக்கி எமது உரிமைகளைப் பறித்தபோது முதலில் குரல் எழுப்பியவர் மறைந்த தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தான். அவர் நாற்பத்தேழாம் ஆண்டு "எழுது வினைஞர் சங்க மாநாட்டில் தமிழன் ஒரு தேசிய இனம் அவனுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. அவன் தனது உரிமைகளை வென்றெடுக்க போராட வேண்டும்" என்று குரல் கொடுத்தார்"

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத்தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியற் தலைவர் வி. நித்தியானந்தன் எழுதிய "இலங்கை அரசியற் பொருளாதாரம் (1938–1956) வர்க்க இனத்துவ நிலைப்பாடுகள்" என்ற நூலை ஆய்வு செய்து உரையாற்றுகையில் தெரிவித்தார். இவ்விழாவிற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. த. பேரின்பநாதன் தலைமை வகித்தார். திரு. சி. க. சிற்றம்பலம் தொடர்ந்து உரையாற்றுகையில்:

"இன்றைக்கு தமிழ் இளைஞர்கள் விடுதலை வேட்கையினால் தம்மை அழித்துவருகிறார்கள். அவர்கள் எதற்காக தங்களை அழித்துக்கொள்கிறார்கள் என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும். இந்த இழப்புக்கள் எல்லாம் எம்மை வாழ்விப்பதற்காகத்தான். எனவே நாம் அனைவரும் அவர்களுக்கு பங்காளியாக துணை நிற்க வேண்டும்" என்றார்.

பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் இன்றைக்கு எமது நாட்டு அரசியல் முறைகள் அனைத்தும் இனத்துவம் தோன்றுவதற்கே வழிகண்டுள்ளன. தவறான அணுகுமுறைகளால் இனங்களிடையில் ஒற்றுமை நிலவவில்லை, இனத்துவம் இனவாதமாகவே பரிணமித்துள்ளது. இதனால் தேசிய வாதம் வலுவிழந்துசெயலற்றுப் போற்யிற்று இனம் சம்பந்தமான விஷயங்களை ஒடுக்குவதற்கு இனத்துவம் பயன்படுத்தப் பட்டுவந்துள்ளது. இன்றைக்கு பல இனமக்களைக் கொண்ட நாடுகளில் கூட இனங்களுக்கிடையில் அமைதியின்மை காணப்பட்டு இனங்கள் பிரிந்து செல்ல விரும்புவதை கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் காண்கிறோம்" என்றார்.

சிறப்புரையை போதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் எம். எல், ஏ. காதர் நிகழ்த்தினார். சிறப்புப்பிரதிகளை செல்வி பிரேமிளா சத்தியநாதன், செல்வி ஜனனி கனகரத்தினம், செல்வன் மா. நடராஜ் சுந்தரம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர் நூலாசிரியர் வி. நித்தியானந்தன் பதிலுரை வழங்கினர்.

### நட்புறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய-இலங்கை நட்புறவு ஒப்பந்தம்பற்றி நீண்டநேரம் பேசினார். இம்மாதம் (மார்ச்) 31-ம் திகதிக்கு முன்னர் எப்படியும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவேண்டும் என்றுகூறினார். எமது நிலையை விளக்கினோம். ஆனாலும் அவர் திருப்திப்படாமல், ஒப்பந்தம் இம்மாதம் முடிவதற்குள் கைச்சாத்திடப்படுவதையே வலியுறுத்தினார்" என்று நிருபர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்; இது பற்றிய இலங்கையின் நிலைப்பாட்டை மேலும் தெளிவுபடுத்தினார்.

### ஒப்பந்தம் மக்களுக்காகவே

"எந்த ஒப்பந்தமும் இந்த நாட்டு மக்களின் நலனுக்காகவே சய்யப்படும். அதே நேரத்தில் நாம் செய்யும் ஒப்பந்தத்தை இந்த நாட்டு மக்களும் நம்பவேண்டும்' என்று தெரிவித்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின மேலும் கூறியதாவது;

"புதிதாகச் செய்யப்படும் நட்புறவு ஒப்பந்தத்துக்கும் பழைய அமைதிப்படை ஒப்பந்தத்துக்கும் தொடர்பில்லை. இந்தியா அறிவித்ததுபோல இந்திய அமைதிப் படையினர் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் வெளியேறி ஆக வேண்டும். அதன்பின்னரே புதிய நட்புறவு 'ஒப்பந்தத்'தில் இலங்கை கைச்சாத்திடுவது குறித்துக் கவனம்செலுத்தும் அதேநேரத்தில் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்: இந்திய அமைதிப்படையினர் இங்கிருந்து வெளியேறுதவரை புதிய நட்புறவு ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடாது. இதுதான் நமது நிலை அதேநேரத்தில் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும் என்று இந்தியா வலியுறுத்துவது சந்தேகத்தையே கிளப்புகிறது. அமைதிப்படை வெளியேற்றத்துக்கும் புதிய நட்புறவு ஒப்பந்தத்துக்கும எந்தவிதத் தொடர்பும் இல்லை. முதலில் அமைதிப்படை முழுவதுமாக வெளியேறவேண்டும். 'பின்னரே, நட்புறவு ஒப்பந்தம்.

### வெலிக்கடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் பெரும்பாலன இளைஞர்கள் வடமராட்சியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தடுப்புக் காவலில் மிகுந்த விரக்தியுற்ற நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது விடுதலை தொடர்பாக பல தடவைகள் தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், பத்திரிகைகள் மற்றும் பல கட்சிப் பிரமுகர்களுக்கும் கடிதங்கள் எழுதியிருந்த போதிலும் தமக்கு இதுவரை விடுதலை கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

தமக்கு வடக்கு- கிழக்கில் தற்போதைய நிலைபற்றி எதுவும் தெரியாதென்றும் ஆட்சியிலிருப்பவர்கள் தமது விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

### ஆயுதங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தை தொடர்ந்து அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்குமுகமாக நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே மந்திரிசபை பேச்சாளரான அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த போது வெளிநாட்டு நிருபர் ஒருவர்;

"ஆயுதமற்ற நாடாக இலங்கையை மாற்ற வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்து மார்ச் மாதம் 1ம் திகதிக்கு முன்னர் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் சட்ட விரோத ஆயுதங்களை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றுவார்கள் என்று நீங்கள் தெரிவித்திருந்தீர்கள் இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன? என்று கேள்விக்கணை தொடுத்தார்.

அதற்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின பதிலளிக்கையில்; தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா முற்றுமுழுதுமாக நம்புகிறார். இந்த நாட்டிலிருந்து கடைசி இந்திய அமைதிப்படை வீரர் வெளியேறியதும் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களை களைவார்கள். இந்த உறுதிப்பாட்டிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தவறமாட்டார்கள் என்பதில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்குப் பூரண நம்பிக்கை உண்டு" என்று தெரிவித்தார்.

### மஹாராஷ்டிராவில் காங்கிரஸ் முன்னணியில்

(புதுடில்லி)

மஹாராஷ்டிரா மாநிலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தேர்தல் முடிவுகளின்படி காங்கிரஸ் முன்னணியில் திகழ்வதாக அறிவிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீது அண்மையில் மட்டக்களப்புக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து நிருபர்கள் கேட்டபோதே அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

"தமிழீழ விடுதலைப்புலிகளின் அழைப்பின் மீதே அமைச்சர் ஹமீது மட்டக்களப்புக்குச் சென்றார். அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. மட்டக்களப்பு நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நேரில் கண்டறியும் பொருட்டே அமைச்சர் ஹமீது அங்கு சென்றார்" என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்.

காங்கேசன்துறை

## அமைதிப்படை முகாமிலிருந்த அனைவரும் விடுதலை

(வடமராட்சி)

வடமராட்சி வழமைக்குத் திரும்புகின்றது. கடந்த பல வருடங்களாக ஸ்ரீலங்கா, இந்திய இராணுவங்களால் பல வழிகளாலும் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிகள் இந்திய இராணுவ வெளியேற்றத்தின்பின் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் சகல விடயங்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டுவருகிறது.

வடமராட்சி மக்கள் பலரும் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி தமது அன்றாட சகஜநிலைக்குத் திரும்பிக் கொண்டு வருகின்றார்கள்.

பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் போக்குவரத்து பஸ்வண்டிகளும் சில வர்த்தக நிலையங்களும் செயல்படத்தொடங்கியுள்ளன நெல்லியடிப் பகுதி முற்றுகச் சுமுக நிலையை அடைந்து காணப்படுகின்றது.

வல்வையில் சுமுக நிலை காணப்பட்டபோதும் மக்கள் குடியிருப்புகளில் இருந்துவரும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அப்பகுதிச் சுற்றாடல் அச்சத்தாலும் வீட்டுச்சொந்தக்காரர்கள் அகதிகளாக வெளியிடங்களில் வாழவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

உடுப்பிட்டிப்பகுதி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியதையடுத்து பாடசாலைகள் சிறப்பாக இயங்குவதுடன் இந்திய இராணுவத்தினர் இருந்து வந்த தென்னிந்திய திருச்சபை சேர்ச்சும் இயங்கத்தொடங்கி பாலர் பாடசாலையும் இயங்கி வருகின்றன.

இதேபோன்று வடமராட்சியின் பலபாகங்களும் சுமுக நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. (-51)

## கிழக்கில் ஹமீத் பாதுகாப்பு உயரதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)

கடந்த செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த உயர் கல்வி விஞ்ஞான தொழில் நுட்பவியல அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ், ஹமீத், ராணுவம், விமானப் படை, பொலிஸ் என்பனவற்றைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்தார்

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புப் பிரச்னைகள் தொடர்பான பல்வேறு அம்சங்கள் பற்றிப் பாதுகாப்பு அதிகாரிகள் அமைச்சரிடம் விரிவாக விளக்கியதாகக் கூறினர்கள்.

## வெளிநாட்டு பயணச்சீட்டு கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுப்பயணச் சீட்டுக்களுக்கான கட்டணங்கள் 13 வீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது என்று விமானப் போக்குவரத்து இயக்குநர் திரு. உபாலி மலல்கொட அறிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பயணச் சீட்டுக்களை வாங்கும் பயணிகளின் நலன்கருதி சீட்டின் பெறுமதி முன்னர்நடைமுறையிலிருந்தது போல இலங்கை ரூபாவிலேயே வெளியிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 500 இலங்கை மாணவர்களுக்கு இந்திய புலமைப் பரிசில்கள்

(கொழும்பு)

இலங்கை மாணவர்களின் உயர்கல்விக்கென இந்தியா 500 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

400 புலமைப்பரிசில்கள் பட்டதாரி மாணவர்களுக்கும் 100 புலமைப் பரிசில்கள் பட்டதாரிபின் படிப்புக்குமென வழங்கப் படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கை மாணவர்கள் இந்திய பல்கலைக்கழகங்கள் அல்லது இந்திய கல்வி நிலையங்களில் உயர்கல்வியை பெற்றுக்கொள்ள முடியும்.

### வி. பி. சிங்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் இம்மாதம் 20-ம் திகதி நமீபியா பயணமாவார்.

### பாண்டிச்சேரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலும், வெற்றி பெற்றுள்ளன.

பாண்டிச்சேரியில் முன்னாள் முதல்வர் திரு. டி. ராமச்சந்திரன் தி. மு. க. கூட்டணியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வருட காலத்திற்குள் இச் சட்டமன்றத்திற்குப் போதிய தன்னாட்சி வழங்கப் படாவிடின் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனப் படுத்தப்படும் என ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய சட்டமன்றத் தீர்மானம் நேற்று திருகோணமலையில் மாகாண சபைக் கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

மாகாண அரசின் இந்தப் பெயர் மாற்றத்தை மாகாண சபை உறுப்பினர்களில் நாற்பதிற்குமதிகமானவர்கள் ஆதரித்தனர்,

முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 17 மாகாணசபை உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்திலிருந்து வாபஸ் பெற்றனர்.

கூடுதல் அதிகாரமும் பாதுகாப்பு விடயத்தில் சலுகைகளும் வேண்டுமென்று திரு. வரதராஜப்பெருமாள் இலங்கை அரசை வலியுறுத்தி வருகிறார்.

தமிழர் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் மீண்டும் மாகாணசபை இயங்கும் என்றும் திரு. பெருமாள் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பி.பி.ஸி. தெரிவித்தது.

## சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரி இறுதி ஆண்டு பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

1989-டிசம்பர் மாதம் நடைபெற்ற லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஆண்டிறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்;

**1-ம் வருடம்**

முதற்பிரிவு

செல்வன் எஸ் தில்லைச்சிவம், செல்வி எஸ். சிவானி.

இரண்டாம் மேற் பிரிவு:

செல்வன் எஸ், சந்திரபாலன், செல்வி எஸ். சுகந்தி. செல்வி கே. ஜெயவதனு, திருமதி எச், எம். அன்பிதா.

சாதாரண சித்தி:

செல்வன் எஸ், புண்ணியகுமாரன், செல்வன் எஸ். ஏ மரியதாஸ், செல்வி கே. குணதேவி.

**2-ம் வருடம்**

முதற்பிரிவு:

செல்வி அ. தேவரஞ்சினி, செல்வி தி. கலாரதி.

இரண்டாம் மேற் பிரிவு:

செல்வன் ப. சத்தியநாதன்.

இரண்டாம் கீழ்ப்பிரிவு:

செல்வி எஸ். லிங்கனமலர்.

சாதாரண சித்தி:

செல்வன் கே. ஜீவானந்தம், செல்வன் வே. சிவஜெயம், செல்வி எஸ்: உஷா.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81. Eelanadu P O. Box No. 49. Telegram; Eelanadu. Telephone: 2291,